E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஜூன் 18 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தිනකරන්

1932 - 2022

வரு. 90 இல. 142

Saturday 18,June, 2022

11 பக்கங்கள்

## நாட்டில் ஒருபோதும் பஞ்சநிலை ஏற்படாது

அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதியளிப்பு



நாட்டில் தற்போது பரந்தளவிலான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் பஞ்சம் ஏற்படாது என கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையில் நேற்று இடம்பெற்ற 06

அரச ஊழியர், மாணவர்களுக்கு திங்கள் முதல்

## இரு வார காலம் online மூலம் கடமைகளை மேற்கொள்ள திட்டம்

பொது நிர்வாக அமைச்சினால் சுற்றறிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்வரும் திங்கட்கிழமை (20) முதல் அரச ஊழியர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இரண்டு வார காலம் வீட்டிலிருந்து வேலை செய்யும் (WFH) திட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சினால் சுற்றறிக்கையின் ஊடாக இந்த வேலைத் திட்டம் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அரச அலுவலக பணிகள் மற்றும் பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை 06

போக்குவரத்து நெருக்கடி நிலை மோசம்

## தமது பிரதேச பாடசாலைகளில் பணிபுரிய ஆசிரியர்களுக்கு அனுமதி

கல்வியமைச்சு தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் போக்குவரத்து நெருக்கடி காரணமாக தாம் வசிக்கும் பகுதிகளில் அருகிலுள்ள பாடசாலைகளில் பணிபுரிய ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு இடையில் மற்றும் தேசிய பாடசாலை மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர்களை தற்காலிகமாக இடம் மாற்றி பணியாற்றுவதற்கான அனுமதியை வழங்குமாறு 06

3 இலட்சம் பீப்பாய் பெட்ரோல்

## இறக்குமதிக்கு கடன்பத்திரம் மக்கள் வங்கியினால் திறக்கப்பட்டது

வார இறுதியில் பெட்ரோலை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெட்ரோல் இறக்குமதி செய்வதற்கான கடன் பத்திரம் திறக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க 3 இலட்சம் பீப்பாய் ஒக்டேன் ரக பெட்ரோலை இறக்குமதி செய்வதற்காகவே மேற்படி கடன் பத்திரம் திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் மக்கள் வங்கியுடன் நேற்று முன்தினம் மேற்கொண்ட முக்கிய பேச்சுவார்த்தையையடுத்து 42 .6 06

எவரையும் பட்டினிபோடுவது எனது நோக்கமல்ல;

# உணவு நெருக்கடியை தீர்க்க உரிய திட்டங்கள் வகுப்பு



விசேட குழுக்களை நியமிக்கவுள்ளதாக பிரதமர் தெரிவிப்பு

**சுமார் 50 இலட்சம் மக்கள் நேரடியாக உணவு நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனினும் அதனை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பேன் எனவும் பிரதமர் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் சுமார் 50 இலட்சம் மக்கள் நேரடியான உணவு நெருக்கடியை எதிர்கொள்ள நேரும் என தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

உணவு நெருக்கடிக்கு மத்தியில் எவரும் பட்டினி கிடப்பது தமது கொள்கையல்ல என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உணவு பாதுகாப்பு தொடர்பான குழுவின் விசேட அமர்வு நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலத்தில் நாட்டில் நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடைப்பட்ட இலட்சம் மக்கள் நேரடியாக 06

## இலங்கைக்கான தனது ஆதரவை வெளியிட்ட சீன ஜனாதிபதி

ஜனாதிபதிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பு



சீனா இலங்கைக்கு எப்போதும் உதவ தயார் எனவும் ஜி குறிப்பிட்டார் என தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்த நாளிற்கான (ஜூலை 20) தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ள அவர் இறப்பர், அரிசி உடன்படிக்கை தன்னிறைவு, ஐக்கியம், பரஸ்பர உதவி ஆகியவற்றினை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து இலங்கைக்கான சீன தூதரகம் தனது டுவிட்டர் 06

ஹஜ் கட்டணம் 20 இலட்சமாகியது;

## யாத்திரை மீது மக்களது ஆர்வம் குறைவடைவு

1,585 பேர் பதிவு செய்தும் 968 பேரே உறுதி

**அஷ்ரப் ஏ ஸமத்**

இலங்கைக்கு 1,585 ஹஜ் கோட்டா கிடைக்கப்பெற்றும் 968 பேரே தங்கள் ஹஜ் பயணத்தை உறுதி செய்துள்ளனர். ஹஜ் கட்டணம் இவ்வருடம் 20–25 இலட்சத்துக்கு உட்பட்டதாகும் என முகவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் யாத்திரைக்காக சுமார் 4600 பேர் தலா 25 ஆயிரம் ரூபா பதிவுக்கட்டணம் செலுத்தி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் தங்களைப் பதிவு 06

எதிர்வரும் தினங்களில் நாடளாவிய ரீதியில்

## எரிபொருளை முறையாக விநியோகிக்க ஏற்பாடு செய்க

அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டா பணிப்பு



நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது கிடைத்துள்ள மற்றும் அடுத்த சில நாட்களுக்குள் 06

05பில்.டொலர் கடன் எதிர்பார்ப்பு;

## IMF பிரதிநிதிகள் திங்கள் இலங்கை வருகின்றனர்

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து அரசாங்கம் இந்த வருடத்தில் 5 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். 06

சுமையாக கருதுவது தவறான செயல்;

## பிள்ளைகளை ஒருபோதும் கொல்ல முயற்சிக்காதீர்

சுமையெனில் பொலிஸாரிடம் ஒப்படைக்கவும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




பிள்ளைகள் சுமையாக கருதினால் அவர்களை கொல்ல வேண்டாம். அருகாமையில் உள்ள பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸார் பெற்றோரிடம் கோருகின்றனர். பிள்ளைகளை வளர்க்க முடியாத நெருக்கடி நிலைமை ஏற்பட்டால் அவர்களை 06

## இலங்கையில் வேகமாக பரவும் இன்புளுவன்சா வைரஸ்

இரத்தினபுரி கலவான பிரதேசத்தில் 14 பேர் பலியானதாக பதிவு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**



இரத்தினபுரி மாவட்டத்தில் இன்புளுவன்சா வைரஸ் தொற்று நோய் ஒன்று மிக வேகமாக பரவி வருகின்றதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி கலவானை பிரதேசத்தை அண்மித்து இந்த இன்புளுவன்சா நோய் வேகமாக பரவி வருவதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவை வைத்திய பணிப்பாளர் டொக்டர் 06

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு

## எனது திட்டத்திற்கு அனுமதி தந்தால் ஒரு இரவிலேயே தீர்வு காணப்படும்

கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**



எரிபொருள், சீமெந்து, உரம் மற்றும் அத்தியாவசிய பொருட்களை இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யும் திட்டத்திற்கு அனுமதித்தால் ஒரு இரவிலேயே அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுக்கு தீர்வு கிட்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற 06

## சிறுவருக்கான மருந்து வகைகள் ஆஸ்பத்திரிகளில் தாராளமாக

பயங்கொள்ள தேவையில்லை என அறிவிப்பு



சிறுவர்களுக்கு அவசர மற்றும் அசாதாரண நிலையின் போது வழங்குவதற்கான மருந்துகள் அரச வைத்தியசாலையில் உள்ளதாக சிறுவர் நோய் விசேட வைத்தியர்கள் சங்கத்தின் உப தலைவர் வைத்தியர் கோசல கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

எனவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சிறுவர்களைக் கொண்டு செல்லுமாறும் அவர் கோரியுள்ளார். 06

**பெருந்தொகை வெளிநாட்டு நாணயங்களுடன் 4 பேர் கைது** 03

உள்நாட்டு பணமும் சிக்கியது



**கனடாவில் காலமான தமிழ் பொலிஸ் அதிகாரிக்கு கௌரவம்** 03

அரைக்கம்பத்தில் கொடிகள் பறக்கவிட்டு அஞ்சலி



**சுவிஸ் சென்றுள்ள சுகாஸின் யாழ். வீட்டில் அதிரடிசோதனை** 03

அவர் தொடர்பாக வீட்டிலுள்ளவர்களிடம் விசாரணை

## எரிபொருளை பெற முஸ்லிம் நாடுகளை நாட ஆலோசனை

கடனுதவி பெற முயற்சிக்குமாறு SJB கோரிக்கை

**அஷ்ரப் ஏ.ஸமத்**

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஆறுமாத கால அடிப்படையில் கடனுதவியை பெற்று, எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற 06

## தமிழகத்தில் மேலும் ஏழு பேர் தஞ்சம்

தனுஷ்கோடியில் தமிழக பொலிஸாரால் மீட்பு



**கோப்பாய் குறூப் நிருபர்**

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக நேற்று (17) 06

21 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்க வேண்டுமானால்

## 13ஐ முழுமையாக பரவலாக்க வேண்டும்

கோவிந்தன் கருணாகரன் MP தெரிவிப்பு



21வது திருத்த சட்டத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டுமானால் 13வது திருத்த சட்டத்திற்குள் இருக்கும் அதிகாரங்களை முழுமையாக பரவலாக்க வேண்டும் என்ற திருத்தம் 21வது திருத்த சட்டத்திற்குள் 06

ராஜகிரிய வாகன விபத்து தொடர்பில்

## சம்பிக்க மீதான வழக்கு விசாரணை ஜூன் 27 இல்



ராஜகிரிய விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிரான வழக்கில், அடிப்படை ஆட்சேபனை தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் கவனயீனமாக வாகனம் செலுத்தி இளைஞர் ஒருவரை 06

## உலக உணவுத் திட்டத்தின் மூலம் மனிதாபிமான வேலைத் திட்டம்

நாட்டில் நிலவும் உணவு நெருக்கடியை கவனத்திற் கொண்டு உலக உணவு திட்டம் அவசர மனிதாபிமான உதவி வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அது தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் என்னியா வெப் தெரிவிக்கையில்:

பொருளாதார நெருக்கடி காரணமாக முறையான உணவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ள 30 இலட்சம் பேருக்கு உணவுப் பொருளுக்கான 06

# சர்வதேச செய்திகள்

## இஸ்ரேலிய இராணுவம் சரமாரி சூடு: பலஸ்தீனர்கள் மூவர் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீன போராளிகள் வலுவாக இருக்கும் ஜெனின் நகரில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலில் 3 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தின் மீது இஸ்ரேலியப் படை நடத்திய சரமாரி துப்பாக்கிச் சூட்டிலேயே இந்த மூவரும் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வாபா தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் கடும் போதல் வெடித்திருப்பதோடு இஸ்ரேலிய துருப்புகள் சூடு நடத்தியதில் மேலும் 10 பேர் காயமடைந்ததாக வாபா தெரிவித்தது.

அந்த வாகனம் துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்பட்டு இருந்ததாக ஏ.எப்.பி செய்தி நிறுவனத்தின் புகைப்படப்பிடிப்பாளர் தெரிவித்துள்ளார். அண்மைய மாதங்களில் இஸ்ரேலிய படை இங்கு தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டு வருகிறது.

இரு வெவ்வேறு இடங்களில் ஆயுதங்களைத் தேடி ஜெனினில் தமது துருப்புகள் சுற்றிவளைப்பில் ஈடுபட்டதாக இஸ்ரேலிய இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

முதல் இடத்தை அடைந்தபோது படையினர் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் இரண்டாவது இடத்துக்குச் செல்லும் வழியில் வீதி ஓரத்தில் இருந்த அடையாளம் காணப்பட்ட சந்தேகத்துக்கு இடமான வாகனம் ஒன்றின் மீது பதிலடி கொடுத்ததாகவும் இஸ்ரேல் இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற தாக்குதலுடன் தொடர்புபட்ட இரு பலஸ்தீனர்கள் ஜெனின் பகுதியில் இருந்து வந்தவர்களாவர்.

கடந்த மார்ச் பிற்பகுதி தொடக்கம் இஸ்ரேல் மற்றும் மேற்குக் கரையில் துப்பாக்கிச் சூடு. கத்திக் குத்து, காரை மோத விடுதல் மற்றும் கோடாரியால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் பதினேழு இஸ்ரேலியர்கள் மற்றும் இரு உக்ரைன் நாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் இஸ்ரேலிய படையுடன் இடம்பெற்ற மோதல்களில் தாக்குதல்தாரிகள் உட்பட பல டஜன் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## தாய்வானை சீர்குலைக்கும் செயலை கைவிட வேண்டும்

### சீனாவுக்கு அமெ. வலியுறுத்து



தாய்வானின் ஸ்தீரத்தன்மையை மேலும் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்ரின் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஷங்கிரி லா கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங்கேயிடம் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பென்டகன் விடுத்துள்ள அறிக்கையொன்றில், ஒரே சீனக் கொள்கை, தாய்வான் உறவுகள் சட்டம், அமெரிக்க சீன மூன்று கூட்டறிக்கைகள் மற்றும் ஆறு உத்தரவாதங்கள் என்பவற்றுக்கான அமெரிக்காவின் பங்களிப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதோடு தாய்வான் நீரிணையின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவமும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## வட கொரியாவில் மர்ம குடல் தொற்று பாதிப்பு



வட கொரியாவில் கொரோனா பாதிப்புக்கு மத்தியில் அடையாளம் காணப்படாத குடல் தொற்று நோய் ஒன்றினால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பது அந்நாட்டின் சுகாதாரத்தில் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

வட கொரியா தனது முதல் கொரோனா சம்பவம் தொடர்பில் கடந்த மாதம் அறிவிப்பு விடுத்த நிலையில் அங்கு நோய் தடுப்புக்காக உச்ச அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தெற்கு ஹ்வன்கே மாகாணத்தில் கடுமையான குடல் தொற்று நோய் ஏற்பட்டிருப்பதாக வட கொரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது. இதனை முடியுமான விரைவில் கட்டுப்படுத்தும்படி அந்நாட்டு தலைவர் கிம் ஜொங் உன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 800க்கும் அதிகமான குடும்பங்களுக்கு மருந்து வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 91 ஆண்டுக்கு முன் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட சிறுவன் விடுதலை



வெள்ளையின பெண் ஒருவரை படுகொலை செய்ததாக 1931 ஆம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பதின்ம வயது கறுப்பின அமெரிக்க சிறுவன் குற்றமற்றவர் என பென்சில்வேனிய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு அளித்துள்ளது.

அந்த சிறுவனின் தற்போது உயிருடன் இருக்கும் ஒரே சகோதரி கடந்த பல தசாப்தங்கள் மேற்கொண்ட போராட்டைத்தைத் தொடர்ந்தே இந்தத் தீர்ப்புக் கிடைத்துள்ளது.

16 வயதான அலெக்சாண்டர் மக்லேய் வில்லியம்ஸ் வெள்ளை இன யூரி சபை ஒன்றால் வெறுமனே நான்கு மணி நேர வழக்கு விசாரணையில் குற்றங்காணப்பட்டார். கிழக்கு அமெரிக்க மாநிலம் ஒன்றில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட வயது குறைந்தவர் என்று அவர் இன்றும் பதிவாகி உள்ளார்.

இந்நிலையில் 91 ஆண்டுகளின் பின் நீதிபதி ஒருவர் இந்த வழக்கை நிராகரித்து வில்லியம்ஸ் நிரபராதி என தீர்ப்பு அளித்துள்ளார்.

'அவர் குற்றமற்றவர் என்பது எமக்குத் தெரியும் என்பதால் இந்தத் தீர்ப்பை மாற்றுவதற்கு நாம் விரும்பினோம். இப்போது அது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது' என்று வில்லியம்ஸின் 92 வயதான சகோதரி சுசி வில்லியம்ஸ் காட்டர் தெரிவித்தார்.

அமெரிக்க சட்டத் துறையில் வரலாற்று ரீதியில் இருந்து வந்த இன ரீதியான அநீதியை காண்பிக்கும் மற்றொரு வழக்காக இது உள்ளது. 1861–1865 சிவில் யுத்தத்திற்கு பின்னர் நிரபராதிகள் பலர் இவ்வாறு மரண தண்டனைக்கு உள்ளாகி உள்ளனர்.

## ஒமிக்ரோன் திரிபு: நீண்ட கொவிட் பாதிப்பு குறைவு



ஒமிக்ரோன் திரிபினால் நீண்ட கொவிட் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் குறைவு என்று லண்டன் ஆய்வு கூறுகிறது. கிங்ஸ் கொலேஜ் ஆய்வாளர்கள் இந்த முடிவை வெளியிட்டனர்.

டெல்ட்டா வைரஸ் திரிபுடன் ஒப்பிடும்போது ஒமிக்ரோன் வைரஸினால் நீண்ட கொவிட் ஏற்படும் சாத்தியம் 20 முதல் 50 வீதம் குறைவு என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

நோயாளியின் வயது, அவர் கடைசியாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டது எப்போது என்பனவற்றை வைத்து நீண்ட கொவிட் ஏற்படுவதற்கான சாத்தியம் வேறுபடுகிறது.

நீண்ட கொவிட் சில வாரங்கள் முதல் சில மாதங்கள் வரை நீடிக்கலாம். சோர்வு முதல் 'மூளையில் மந்தம்' வரை அதன் அறிகுறிகளாக கூறப்படுகின்றன.

நீண்ட கொவிட் கவலைக்குரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக விளங்குகிறது. பிரிட்டனில் 2 மில்லியன் பேருக்கு நீண்ட கொவிட் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

## குழந்தைத் தொழிற்சாலையில் இருந்து 35 பெண்கள் விடுவிப்பு



நைஜீரியாவில் 'குழந்தை தொழிற்சாலை' என்று அழைக்கப்படும் முகாம் ஒன்றில் இருந்து குறைந்தது 35 பதின்ம வயது பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இடங்களில் விற்பனைக்காக குழந்தைகளை பெற்றெடுக்க பெண்கள் மற்றும் சிறுமிகள் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

தென் கிழக்கு மாநிலமான அனப்ராவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கட்டடத்தில் இருந்து பெண்களில் நால்வர் ஏற்கனவே கர்ப்பமுற்றிருந்ததாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சிறுமிகளை கடத்திச் சென்று அவர்களை பாலியல் அடிமைகளாக வைத்து குழந்தை தொழிற்சாலையை இயக்கிய சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான குற்றச்செயல் ஆட்கடத்தல் கும்பல்களாலேயே நடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

இதில் சில கட்டடங்கள் மகப்பேற்று சிகிச்சை நிலையம் அல்லது ஹோட்டல் போன்று வேடமிட்டு நடத்தப்படுகின்றன.

## அமெரிக்காவில் சவூதி தூதரக வீதிக்கு கசோக்கியின் பெயர்



சவூதி முகவர்களால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஜமால் கசோக்கியின் பெயர் வொஷிங்டன் டி.சியில் சவூதி அரேபிய தூதரகத்திற்கு முன்னால் உள்ள வீதிக்கு சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கொலை சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அதிருப்தியின் நினைவை மறைக்க முடியாது என்பதை உறுதி செய்வதற்காகவே கசோக்கியின் பெயர் சூட்டப்பட்டதாக அமெரிக்கத் தலைநகர நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கொலைக்கு சவூதி முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மான் ஒப்புதல் அளித்ததாக அமெரிக்க உளவுப் பிரிவு முடிவுக்கு வந்தது. எனினும் இதனை அவர் மறுத்தார். அடுத்த மாதம் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை முதல் முறை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

புதிய ஹம்ஸ்பெயர் ஒழுங்கையில் இருக்கும் சவூதி தூதரகத்திற்கு முன்னால் உள்ள வீதிக்கான புதிய பெயர் மாற்ற பலகையை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

2018 ஆம் ஆண்டு துருக்கியின் இஸ்தன்பூல் நகரில் உள்ள துணைத் தூதரகத்திற்குள் வைத்தே கசோக்கி படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமணத்தில் மணமகளை அடித்த மணமகன் மீது குற்றச்சாட்டு பதிவு



உஸ்பெக்கிஸ்தானில் திருமணத்தின்போது மணப்பெண்ணிடம் விளையாட்டில் தோற்றதால் அவரை அடித்த மணமகன் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

போக்கிரித்தனமாக நடந்துகொண்டதாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

மிட்டாய் தாள்களை யார் முதலில் அவிழ்க்கிறார் என்ற விளையாட்டைத் திருமணத்திற்கு வந்த விருந்தினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதில் மணப்பெண் வெற்றி பெற்றார்.

கோபமடைந்த மணமகன் மணப்பெண்ணின் தலையின் பின்பக்கத்தில் வேகமாக அடித்தார்.

அந்தச் சம்பவம் ஜூன் 6ஆம் திகதி சூர்கந்தர்யோ என்ற பகுதியில் நடந்தது. அந்தத் தம்பதியிடமும் அவர்களின் பெற்றோரிடமும் சம்பவம் குறித்து பொலிஸார் பேசியதாக அரசாங்க குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஊர் மூத்தோர், தம்பதியின் உறவினர்கள் ஆகியோர் கலந்துகொண்ட ஊர்ச் சந்திப்பில் மணமகன் மணப்பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டதாகவும் நடந்தவற்றுக்கு வருத்தம் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

திருமண நாளன்றே தம்பதி சமரசம் செய்துகொண்டதாகவும் அவர்கள் தற்போது ஒன்றாக வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் மணமகனுக்கு அபராதம் அல்லது அதிகபட்சம் 15 நாட்கள் தடுப்புக் காவல் தண்டனையாக விதிக்கப்படலாம்.

எனினும் உஸ்பெக் திருமணம் ஒன்றில் இவ்வாறு நிகழ்வது இது முதல் முறையல்ல. 2019 இல் மணமகனை உணவு வழங்கும்போது ஏமாற்றிய மணமகளின் கன்னத்தில் அறையும் வீடியோவும் சமூக ஊடகத்தில் பிரபலம் அடைந்தது.

## அசாஞ்சை அமெரிக்காவுக்கு நாடுகடத்த பிரிட்டன் ஒப்புதல்



விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சை அமெரிக்காவுக்கு நாடுகடத்துவதற்கு பிரிட்டன் உள்துறை செயலாளர் பிரீத்தி படேல் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீடும் செய்ய அசாஞ்சுக்கு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்படுவதாக உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடுகடத்தல் அவரது மனித உரிமையுடன் தொடர்புபடவில்லை என்று பிரிட்டன் நீதிமன்றங்கள் தெரிவித்திருப்பதாகவும் அவர் முறையாக நடத்தப்படுவார் என்று அமெரிக்கா குறிப்பிட்டிருப்பதாகவும் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்தது.

2010 மற்றும் 2011இல் ஆவணங்களை கசியவிட்டது தொடர்பில் அசாஞ்சை அமெரிக்கா தேடி வருகிறது. 2019 இல் லண்டனில் இருக்கும் ஈக்வடோர் தூதரகத்தில் இருந்து அவர் வெளிற்றப்பட்ட பின் பிரிட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டது தொடக்கம் சிறை அனுபவித்து வருகிறார். ஈக்வடோர் அவரது தஞ்சக் கோரிக்கையை நிராகரித்ததை அடுத்தே தூதரகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

'இது ஊடகச் சுதந்திரம் மற்றும் பிரிட்டன் ஜனநாயகத்தின் இருண்ட நாள்' என்று இந்த உத்தரவு பற்றி விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

'இது போராட்டத்தின் முடிவு அல்ல' என்று டுவிட்டரில் பதிவிட்டிருக்கும் விக்கிலீக்ஸ் இந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்வதாக குறிப்பிட்டுள்ளது.

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.32
லுஹர் - 12.13
அஸர் - 03.40
மஃரிப் - 06.28
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் ஆனி 04
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**
மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

பிரதமர் ரணில் தலைமையில் விசேட பேச்சுவார்த்தை

# இந்தியாவிலிருந்து 50,000 மெ.தொன் அரிசி இறக்குமதிக்கு தீர்மானம்

## தட்டுப்பாடு, விலை உயர்வுக்கு தீர்வாக அரசு முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்கொள்ள நேரும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் இந்திய கடன் உதவித் திட்டத்தின் மூலம் 50.000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் எதிர்கொள்ள நேரும் அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதுடன் அரிசிக்கான அதிகரித்த விலை உயர்வை கட்டுப்படுத்தவும் முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் துறை சார்ந்த அரச, தனியார் துறை அதிகாரிகள் பலரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

அதற்கிணங்க இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் அதற்குத் தேவையான நிதியை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்குவது என்றும் இந்த கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் மேலும் 03 வருடங்கள் மின்வெட்டு தொடரும் நிலை

## மின்வெட்டும் நேரம் அதிகரிக்கலாம்

மூன்று வருடங்களுக்கு நாட்டில் மின்வெட்டு தொடரும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேவை ஒரு நாளைக்கு சுமார் 2,800 மெகாவாட் ஆகும். எனினும், தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் நாட்டின் மின்சாரத் தேவைக்கு போதுமான அளவு உற்பத்தி செய்யவில்லை. அனல் மின், காற்றாலை மின், சூரிய மின்கலங்கள் மூலம் மின் விநியோகத்தை அதிகரிக்கும் வரை, மின்வெட்டு தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியால் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெப்ரவரி 22ம் திகதி முதல் இலங்கையில் நாளாந்த மின்வெட்டு தொடர்வதாக ரஞ்சித் தெரிவித்தார்.

தற்போது, இலங்கை தனது பெரும்பாலான மின்சாரத்தை நீர் மின்சாரத்தில் இருந்து உற்பத்தி செய்கிறது, ஆனால் மழை இல்லாத நாட்களில் அது சாத்தியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய மின் வெட்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சுமார் ஒன்றரை மணி நேரத்தினால்

06

# கனடாவில் காலமான தமிழ் பொலிஸ் அதிகாரிக்கு கௌரவம்

## அரைக்கம்பத்தில் கொடிகள் பறக்கவிட்டு அஞ்சலி



கனடாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கில் விபத்தில் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றிய இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

28 வயதான விஜயாலயன் மதியழகன் என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கனடிய இராணுவத்தில் பல வருடங்கள் பணியாற்றிய நிலையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டுள்ளார்.

விபத்தை அடுத்து உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"மிகவும் சோகத்துடன், எங்கள் உறுப்பினர்களில் ஒருவர் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துவிட்டார் என்பதை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்" என்று ஒட்டாவா காவல்துறை புதன்கிழமை காலை ட்வீட் செய்துள்ளது.

மதியழகன் எப்போதும் நல்ல மனநிலையில் இருந்ததாகவும், அவர் புன்னகையுடன்

06

# பதுக்கி வைத்திருந்த பெட்ரோல், டீசல் சுப்பர் பெட்ரோல் மக்களுக்கு விநியோகம்

## திருக்கேதீஸ்வரம் சந்தி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிரடி நடவடிக்கை

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார்மதவாச்சி பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் சந்தியில் அமைந்துள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெட்ரோல் மற்றும் டீசலை மன்னார் மாவட்டச் செயலக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் (16) இரவு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மதவாச்சி பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் சந்தியில் அமைந்துள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களை கையிருப்பில் வைத்துக் கொண்டு மக்களுக்கு வழங்காது பதுக்கி வைத்திருப்பதாக மக்கள் மன்னார் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்துள்ளனர். மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் மாவட்டச் செயலக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் இணைந்து நேற்று முந்தினம் இரவு குறித்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சோதனைகளை நடத்தியுள்ளனர்.

இதன் போது குறித்த எரிபொருள் நிலையத்தில் பெட்ரோல், டீசல் மற்றும் சுப்பர் பெட்ரோல் பதுக்கி வைக்கப் பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் போது 2 ஆயிரத்து 47 லீற்றர் பெட்ரோல் 3 ஆயிரத்து 153 லீற்றர் டீசல் மற்றும் 3 ஆயிரத்து 196 லீட்டர் சுப்பர் பெட்ரோல் ஆகியவை பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த எரிபொருட்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் உடனடியாக மக்களுக்கு வினியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# பெருந்தொகை வெளிநாட்டு நாணயங்களுடன் 4பேர் கைது

## உள்நாட்டு பணமும் சிக்கியது

பெருந்தொகை வெளிநாட்டு நாணயங்களும் உள்நாட்டு பணமும் வைத்திருந்த 4பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு கோடியே 86 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா உள்நாட்டு பணத்தையும், 4 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தையும் வைத்திருந்த நான்கு சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். புறக்கோட்டை உள்ளிட்ட 3 இடங்களில் விசேட அதிரப்படையினரால் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை டெனெட் சந்தைக் கட்டடத் தொகுதி, மாளிகாவத்தை நூரானியா சந்தி, கொழும்பு 10 முதலான இடங்களில் உள்ள 3 தங்க ஆபரண விற்பனை நிலையங்களை சோதனைக்கு உட்படுத்தியபோதே குறித்த பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், வெள்ளவத்தை, மருதானை மற்றும் புதுக்கடை முதலான பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவிஸ் சென்றுள்ள சுகாஸின் யாழ். வீட்டில் அதிரடிசோதனை

## அவர் தொடர்பாக வீட்டிலுள்ளவர்களிடம் விசாரணை



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் சுவிட்சர்லாந்தில் நடைபெறும் சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ள நிலையில், யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையில்உள்ளஅவரது இல்லத்துக்குச் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வீட்டில் உள்ளவர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சுவிட்சர்லாந்திலிருந்து அறிக்கை ஒன்றை சுகாஸ் வெளியிட்டுள்ளார். பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் கவனத்திற்கு என்ற தலைப்பில் வெளியிட்ட அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது:

சர்வதேசக் கருத்தமர்வு ஒன்றில் பங்கேற்பதற்காகவே கொசோவா, சிம்பாப்வே, சிரியா மற்றும் ஜோர்ஜியா நாட்டுப் பிரதிநிதிகளுடன் சுவிட்சர்லாந்தில் தங்கியுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

நகர்ப்புறம் நோக்கி செல்லும் மாணவர்களை

# அருகிலுள்ள பாடசாலைகளில் இணைக்குமாறு கோரிக்கை

## கல்வி அமைச்சு வலுவான வேண்டுகோள்

நகரங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் தூரப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமது பிரதேசத்திற்கு அருகிலுள்ள பாடசாலைகளில் இணைக்குமாறு கோரிக்கை விடுக்கும் நிலை அதிகரித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலவும் எரிபொருள் நெருக்கடி, போக்குவரத்து மற்றும் பொருளாதார பிரச்சினை காரணமாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுவதாக, கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் தொடர்பான பணிப்பாளர் கித்சிறி லியனகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இந்த ஆண்டு இறுதி வரையில் மாத்திரம், குறித்த மாணவர்களை தங்களது

06

எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

# இரவு, பகலாக மக்கள் நீண்டவரிசையில்

## எரிபொருள் இல்லாத நிலையிலும் காத்திருப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அருகில் கிலோ மீற்றருக்கும் கூடுதலான தூரம் நீண்ட வரிசைகள் காணப்படுவதாக தெரியவருகிறது.

எரிபொருள் இல்லாவிட்டாலும், எரிபொருளை பெறுவதற்காக, இரவு, பகலாக ஏராளமானோர் வரிசையில் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹா, கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி ஆகிய இடங்களில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பல நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் காணப்படுகின்றன.

முச்சக்கர வண்டி சாரதிகள், மோட்டார் சைக்கிள்கள், தனியார் பஸ்கள் உட்பட பல்வேறு வாகனங்கள் இவ்வாறு வரிசையில் நிற்பதை காணமுடிகிறது.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு

# பல்லேகல மைதானத்தில் பல்கலை மாணவர் நால்வர் கைது

பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளின் போது மைதானத்திற்குள் நுழையும் விளையாட்டு ரசிகர்களின் அனுமதிச் சீட்டுகளை பரிசோதித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மதுபோதையில் வந்த குழுவொன்று பொலிஸாரை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

கலைப்பீடத்தில் 4ஆம் ஆண்டில் கல்வி பயிலும் 3 மாணவர்களும், மாணவி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 24 மற்றும் 28 வயதுடைய குருநாகல், கொஸ்லந்த மற்றும் கெக்கிராவ பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.


## பெறுகை அறிவித்தல் (திருத்தம்)

**பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான சீவளி வீதி சந்தை கட்டிடத் தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு விடல்**

2022.05.31ம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெயிலிநியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதியின் 22 கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கான பெறுகை அறிவித்தலில் தவறுதலாக கீழ்க்காணும் கடை அறைகளின் குறைந்தபட்ச தொகை மாற்றப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளதால் அது கீழ்க்குறிப்பிடப் படுமாறு திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேற்படி தினம் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலின் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே அமுலில் இருக்கும்.

**அட்டவணை 01**

| தொடர் இல. | சொத்து விபரம் | கடை இலக்கம் | குறைந்த பட்ச கேள்வி (ரு) |
|---|---|---|---|
| 01 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (தரைமாடி) | GF-02 | 7,200,000.00 (எழுபத்தியிரண்டு லட்சம்) |
| 02 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (தரைமாடி) | GF-09 | 9,900,000.00 (தொண்ணூற்றி ஒன்பது லட்சம்) |
| 03 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (தரைமாடி) | GF-10 | 9,900,000.00 (தொண்ணூற்றி ஒன்பது லட்சம்) |
| 04 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (முதலாம் மாடி) | FF-05 | 6,100,000.00 (அறுபத்தியொரு லட்சம்) |
| 05 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (முதலாம் மாடி) | FF-09 | 8,400,000.00 (என்பத்து நான்கு லட்சம்) |
| 06 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி ((இரண்டாம்மாடி)) | SF-01 | 4,400,000.00 (நாற்பத்து நான்கு லட்சம்) |
| 07 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (இரண்டாம்மாடி) | SF-02 | 4,900,000.00 (நாற்பத்து ஒன்பது லட்சம்) |
| 08 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (இரண்டாம்மாடி) | SF-06 | 5,250,000.00 (ஐம்பத்து இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) |
| 09 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (இரண்டாம்மாடி) | SF-07 | 6,800,000.00 (அறுபத்து எட்டு லட்சம்) |
| 10 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (இரண்டாம்மாடி) | SF-08 | 6,500,000.00 (அறுபத்து ஐந்து லட்சம்) |
| 11 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (இரண்டாம்மாடி) | SF-09 | 6,500,000.00 (அறுபத்து ஐந்து லட்சம்) |
| 12 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (இரண்டாம்மாடி) | SF-10 | 6,800,000.00 (அறுபத்து எட்டு லட்சம்) |
| 13 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-02 | 4,900,000.00 (நாற்பத்து ஒன்பது லட்சம்) |
| 14 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-03 | 5,100,000.00 (ஐம்பத்து ஒரு லட்சம்) |
| 15 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-04 | 5,100,000.00 (ஐம்பத்து ஒரு லட்சம்) |
| 16 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-05 | 5,250,000.00 (ஐம்பத்து இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) |
| 17 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-06 | 5,750,000.00 (ஐம்பத்து ஏழு லட்சத்து ஐம்பதாயிரம்) |
| 18 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-07 | 6,800,000.00 (அறுபத்து எட்டு லட்சம்) |
| 19 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-08 | 6,500,000.00 (அறுபத்து ஐந்து லட்சம்) |
| 20 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-09 | 6,500,000.00 (அறுபத்து ஐந்து லட்சம்) |
| 21 | சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதி (மூன்றாம்மாடி) | TF-10 | 6,800,000.00 (அறுபத்து எட்டு லட்சம்) |

**2022.06.15**
**பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில்**

**ஜனக்க நிஷாந்த ரத்னாயக்க (நகர பிதா)**
**தலைவர்**
**கேள்விச் சபை, மாநகர சபை**
**பண்டாரவளை**


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.85 | 255.31 |
| கனடியன் டொலர் | 272.55 | 285.09 |
| யூரோ | 369.24 | 384.36 |
| ஜப்பான் யென் | 2.6143 | 2.7255 |
| சிங்கப்பூர் டொலர் | 253.84 | 264.59 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 425.35 | 442.62 |
| சுவிஸ் பிராங்க் | 353.52 | 369.35 |
| அமெரிக்க டொலர் | 355.70 | 366.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 954.47 | கட்டார் ரியால் | 98.55 |
| குவைத் டினார் | 1,170.07 | சவூதி ரியால் | 95.91 |
| ஓமான் ரியால் | 934.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 97.97 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆனி மாதம் 04ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 17

## குறள் தரும் சிந்தனை



ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமே கூடக் கைக்குள் வந்து விடும்.

# நாட்டின் நிலைமையைப் புரிந்தவாறு சகிப்புத்தன்மை பேணுவதே உகந்தது!

உள்நாட்டில் உணவுப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளல், நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ளல், இன்றைய நெருக்கடியை தெளிவாகப் புரிந்து கொண்டு அனைத்து அரசியல் தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்படல் ஆகியவற்றின் மூலமே நாம் மீட்சி பெற முடியும்.

நாடு பொருளாதார நிலைமையில் மிக மோசமான கட்டத்துக்குச் சென்றுள்ளதென்பதை எவருக்குமே இனிமேல் புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை. அன்றாட பாவனைப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் பற்றாக்குறை ஆகியவை எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியை நன்கு புலப்படுத்துகின்றன. எரிபொருள் நிலையங்களில் காணப்படுகின்ற கியூ வரிசை இன்னுமே குறைந்தபாடாக இல்லை.

இவ்வாறான நிலையில் இன்றைய நெருக்கடிக்கான காரணகர்த்தாக்கள் யாரென்று தேடிக் கொண்டிருப்பதாலேயோ அல்லது அரசியல்வாதிகள் மீது கண்டனம் தெரிவிப்பதாலேயோ எந்த நன்மையும் ஏற்பட்டு விடப் போவதில்லை. இன்றைய நெருக்கடி நிலைமையில் இருந்து நாடு எவ்வாறு மீள முடியுமென்பது குறித்தே அனைவரும் இன்றைய நிலையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

நாட்டு மக்கள் இன்றைய காலத்தில் நிறையவே நொந்து போயிருக்கின்றார்கள். எமது தாய்நாடு தற்போது நெருக்கடியான காலப்பகுதிக்குள் பிரவேசித்துள்ளதென்பதை கற்றறிந்தவர்கள் மாத்திரமன்றி சாதாரண மக்களும் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். இன்று எமது நாடு அனுபவிப்பது மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஆகும். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் இவ்வாறான நெருக்கடியை முன்னர் ஒருபோதுமே சந்தித்ததில்லை என்பதை அறிய முடிகின்றது.

மக்கள் பயன்படுத்துகின்ற அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்து விட்டன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக மக்கள் அல்லல்படுகின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மக்கள் மாத்திரமின்றி, நடுத்தர வர்க்க மக்களும் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதற்கு தற்போது அல்லல்படுகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பானது மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. வறிய மக்களின் துன்பங்கள் சொல்லும் தரமன்று. அத்துடன் சமையல் எரிவாயு மற்றும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களின் விலையுயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

அதேசமயம் சமையல் எரிவாயுவுக்குப் பதிலாக மாற்றுவழிகளை பயன்படுத்துவதில் மக்கள் பலர் ஈடுபட்டு வருவதை இப்போது காண முடிகின்றது. கிராமங்களிலுள்ள மக்கள் சமையல் முறைமையில் அன்றைய காலத்தைப் போன்று பாரம்பரிய முறைகளில் இறங்கி விட்டனர். தங்களது காணிகளில் கிடைக்கக் கூடிய சிறிய விறகுகளையும் கூட அவர்கள் இப்போது பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். தென்னை மரங்களில் இருந்து கிடைக்கின்ற அத்தனையும் இன்று சமையலுக்கான விறகுகளாக மாறியுள்ளன.

உமி மற்றும் மரத்தூளைப் பயன்படுத்தி விறகு அடுப்புகளில் கிராமத்து மக்கள் உணவு சமைப்பதைக் காண முடிகின்றது. அதே போன்று சிரட்டைக் கரி அடுப்பும் இன்று பாவனைக்கு வந்துள்ளது. குப்பையாக வீசுகின்ற மரத்தின் கழிவுப் பொருட்கள் எரிசக்தித் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. குறுகிய காலப் பகுதியில் கிராமங்களில் கூட சமையல் எரிவாயு வேகமாகப் பாவனைக்கு வந்திருந்த நிலையில், தற்போது கிராமத்து மக்கள் எரிவாயுவையே தங்கள் பாவனையில் இருந்து விலக்கிக் கொள்கின்ற நல்லதொரு மாற்றத்தையும் இக்காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

மக்களின் வாழ்வில் நெருக்கடி உருவான வேளைகளிலெல்லாம் அறிவியலும், புதிய கண்டுபிடிப்புகளும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதே வரலாறு ஆகும். அதேசமயம் நெருக்கடியிலிருந்து சமாளித்து வாழ்வதற்கான பொறுமையும், சகிப்புத்தன்மையும் மக்கள் மத்தியில் இயல்பாகவே ஏற்பட்டு விடுகின்றது. மனித இனத்தின் கடந்த கால வரலாற்றை எடுத்து நோக்குமிடத்து இவ்வாறான மாற்றங்களை எங்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்று எமது நாட்டில் உருவாகியிருப்பது நெருக்கடியை சமாளிப்பதும், அதனை வெற்றி கொள்வதற்குமான போராட்டம் ஆகும். முடிந்தவரை உள்நாட்டு உற்பத்தியை பெருக்கிக் கொள்வதிலும், நாட்டின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். சுற்றுலாத்துறையை ஊக்குவித்துக் கொள்வதும் பிரதானமான ஒன்றாகும்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிவகைகளை எமது நாடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்நிய செலாவணியை அதிகரித்துக் கொள்வதற்கு இதுவே பிரதான வழியாகும். இலங்கை நிலைமையை பாரதூரமானதாகக் காண்பிக்கின்ற திட்டமிட்ட பிரசாரங்களை எதிரணியினர் நிறுத்திக் கொள்வதும் அவசியமாகும். எமது தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதில் அனைவருக்கும் அர்ப்பணிப்பு அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# மொனராகலையின் அடர்ந்த வனத்தினுள் அமைந்துள்ள கபில்வத்தை புனிதபூமி

ஆதி கதிர்காமம் என்றழைக்கப்படும் கபிலியத்தை அல்லது கபில்வத்தை எனும் புனித இடத்திற்கு சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜீ தலைமையிலான குழு அண்மையில் சென்றிருந்தது. இது அந்த குழுவின் எட்டாவது விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது.

கதிர்காமம் கந்தன் ஆலயத்திற்கு அடிப்படையான இந்த ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபிலியத்தை புனித பிரதேசம் மொனராகலை காட்டுக்குள் அமைந்திருக்கின்றது. மிகவும் கரடு முரடான பாதைகள் ஊடாக எட்டு மணி நேரம் தனிக்காட்டுக்குள் பயணிக்க வேண்டும்.

உகந்தை குமுக்கன் வழியாகவும் இந்த இடத்திற்கு செல்லலாம். அல்லது மொனராகலை வழியாகவும் இந்த இடத்திற்குச் செல்ல முடியும் . ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே மரக்கறி புசித்து விரதம் இருந்து செல்வது வழக்கம். இம்முறை யாழ்ப்பாணத்தில் இருந்தும் வேத வாத்தியார்கள் உள்ளிட்ட குழுவினர் சிவசங்கர்ஜீ தலைமையில் அங்கு சென்று வந்தார்கள்.

மூன்று நாள் பயணம். அங்கு மாணிக்க கங்கையிலே அவர்கள் மரகத லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார்கள். அதைவிட இன்னுமொரு பாரிய அபிஷேகத்தையும் அங்கு செய்திருந்தார்கள்.





## கபிலியத்தையில் மரகத லிங்கத்திற்கு அபிஷேகம்



மிகவும் ஆன்மீக அனுபவங்கள் நிறைந்த பயணமாக இருந்தது என்று சிவசங்கர்ஜீ கூறினார்.

ஒரு அடர்ந்த வனத்தில் முருகப் பெருமானின் ஆறு எழுத்து மந்திரங்களை அட்சரமாக பிரித்து, தொடர்ச்சியாக சரியாக காலை பத்து மணிக்கு தொடங்கி இரவு எட்டு மணி வரை பத்து மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற அற்புதமான வேள்வி இது. முதலில் முழுமையாக ருத்ர, சமக, பூமி சூக்த, ஔசதி சூக்த, கிரண்யா கர்ப்ப சூக்த ஜெபம், குமார உபனிஷத் என பாராயணங்கள் தொடங்கி தொடர்ந்து, இயற்கையையே பிரமாண்டமான ஹோம குண்டமாக அமைத்து, முருகப் பெருமானின் மூல மந்திர ஹோமத்தில் தொடங்கி, உயிர் மெய் எழுத்துக்களை கொண்டு உருவாக்கப்பட்ட அட்சரங்களை கொண்ட 300 மந்திரங்களை கொண்ட சத்ரு சம்கார ஹோமம் நடைபெறும்.

எவ்வளவு பெரிய சிவாச்சாரியாராக இருந்தாலும் முருகப் பெருமானின் ஆசி இருந்தால் மட்டுமே இது போன்ற இடங்களுக்கு பல தடைகளையும் தாண்டி பயணிக்க முடியும். அதுவும் சஷ்டி திதியில் முருகப் பெருமானே ஆதியில் தவமியற்றி இன்றும் வாழும் மண்ணில் இது போன்ற வேள்வியை நிகழ்த்த முருக பெருமானால் ஆசிர்வதிக்க பட்டவர்களாலேயே முடியும்.

சங்கர் சர்மா மற்றும் சுமணசன் சர்மா ஆகியோர் நன்றிக்கு உரியவர்கள். சங்கர் சர்மா வைதீக கிரிகைகளில் முறையாக தேர்ச்சி பெற்றவர். சுமணசன் அவர்கள் ஒரு மாபெரும் சிவாச்சாரியரான மஹாதேவா உபாத்தியாயரின் பேரன். துளி கூட அட்சர சுத்தம் பிசராமல் அமைதியாக எட்டு மணி நேரத்துக்கு மேல் ஜெபம், பாராயணங்கள் செய்வது என்பது சாதாரண விடயமல்ல.

அடுத்ததாக நன்றி சொல்ல வேண்டியது மணிக்குருக்கள், திவாகர குருக்கள், சந்திரன் குருக்கள் என்ற மூவருமாவர். முழுமையாக தங்களை அர்ப்பணித்து வேள்வியை நிகழ்த்தினர்கள். இவர்களுக்கு பக்கபலமாக தம்பி கரன்சர்மா, யசோதர சர்மா ஆயியோர் அனைத்து ஒழுங்குகளையும் செய்தனர்".

இவ்வாறு அவர் விபரித்தார்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# தமிழகத்தில் மூன்று மாதங்களுக்கு பின்னர் சம்பவித்த முதல் மரணம்!


## மீண்டும் தீவிரமாக பரவும் கொரோனா

தமிழ்நாட்டில் இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொள்வது கட்டாயம் என்று மாநில மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒரே நாளில் 476 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த புதனன்று 332 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில், நேற்று 476 ஆக அதிகரித்துள்ளது.

சென்னையில் மாத்திரம் 24 மணி நேரத்தில் 221 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. புதனன்று 171 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் 221 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கொரோனாவால் 24 மணி நேரத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேபோல் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 1,938 ஆக உள்ளது.

3 மாதங்களுக்கு பிறகு தமிழ்நாட்டில் முதல் கொரோனா மரணம் நிகழ்ந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த 18 வயது இளம்பெண் உயிரிழந்தார். இவருக்கு எந்தவித இணைநோயும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து செங்கப்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு நடத்தினார்.



இதுகுறித்து செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுகையில், கொரோனா வைரஸ் பாதிப்பு மற்ற மாநிலங்களில் ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில் பாதிப்புகள் குறைவாகவே உள்ளது. தமிழ்நாட்டில் முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 95 சதவீதமாகவும், இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 85 சதவீதமாகவும் உள்ளது. இப்போது இரண்டாவது தவணை செலுத்திக் கொண்டு 9 மாதங்கள் முடிவடைந்தவர்கள், பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் செலுத்திக் கொள்ள வேண்டும். அப்படி செலுத்திக் கொண்டால் மட்டுமே கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும். கொரோனாவில் இருந்து பாதுகாத்துக் கொள்ள தடுப்பூசி மட்டுமே தீர்வு. தஞ்சையைச் சேர்ந்த இளம் பெண் உயிரிழப்புக்கு, அலட்சியமே காரணம். பொதுமக்கள் தங்களது உடலில் சிறிய அளவில் மாற்றம் தெரிந்தாலும் உடனடியாக மருத்துவமனையில் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்" என்றார்.

# பேறிவாளனை போன்று நளினி, ரவிச்சந்திரன் விடுவிக்கப்படாததற்கான காரணம் என்ன?

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகள் நளினி மற்றும் ரவிச்சந்திரன் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கி உள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பிற்கு முக்கியமான காரணம் ஒன்றை தெரிவித்துள்ளது.

ராஜிவ்காந்தி 1991 ஆம் ஆண்டு ஸ்ரீ பெரும்புதூரில் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்யப்பட்ட வழக்கில் வழக்கில் ஆயுள் கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018 செப்டம்பர் 9 ஆம் திகதி தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது.



## சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

இந்த தீர்மானம் 2018 செப்டம்பர் 11 ஆம் திகதி ஆளுனர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் ஆளுநர் இதில் முடிவு எதுவும் எடுக்கவில்லை. அரசு அனுப்பிய தீர்மானத்தில் ஆளுனர் தாமதிப்பதால், அவரது ஒப்புதலுக்கு காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்யக் கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த ஆண்டு தொடக்கத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இதேபோல தமிழக அரசின் தீர்மானத்தின்படி தன்னை விடுதலை செய்யக் கோரி ரவிச்சந்திரன் கடந்த 2020 ஆம் ஆண்டு மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரி, நீதிபதி என். மாலா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டன. அப்போது, நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் ஆளுநர் முடிவு எடுக்காமல் இருந்ததும், இரண்டரை ஆண்டுகளுக்கு பின் அமைச்சரவை பரிந்துரையை குடியரசு தலைவருக்கு அனுப்பியதும் அரசியல் சாசனத்துக்கு விரோதமானது எனத் தெரிவித்தார்.

அரசால் தண்டனை குறைப்பு செய்யப்பட்ட தன்னை விடுதலை செய்ய அரசு முடிவெடுத்த பிறகு, விடுவிக்கப்படாத ஒவ்வொரு நாளும் சட்டவிரோத காவலில் இருப்பதாக கருதி தன்னை விடுவிக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. அரசியல்சாசனத்துக்கு விரோதமாக ஆளுநர் செயல்பட்டிருந்தால் உயர் நீதிமன்றம் தலையிட்டு, அதை சட்டவிரோதம் என அறிவிக்கலாம் எனவும், இரண்டரை ஆண்டுகள் அமைச்சரவை பரிந்துரை மீது எந்த முடிவும் தெரிவிக்காமல் குடியரசு தலைவருக்கு அனுப்பியதால் இந்த விவகாரத்தை மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி வைக்கக் கூடாது எனவும் வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

தாமாக விடுதலை செய்யக் கோரவில்லை எனவும், உச்சநீதிமன்ற உத்தரவின்படி ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் விடுதலை செய்யும்படி அரசுக்கு உத்தரவிட தான் கோருவதாகவும், அநீதியை அழிக்க உயர் நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல ரவிச்சந்திரன் தரப்பில் வழக்கறிஞர் சாமிதுரை ஆஜராகி 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவிக்கும் அவரை விடுவிக்க தமிழக அரசு 2018அம் ஆண்டு முடிவெடுத்தாலும் இதுவரை சிறைவாசம் அனுபவிப்பதாகவும் அரசின் முடிவை அமல்படுத்தும் வகையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுமென வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், நளினிக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை, ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டதாகவும், ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018 இல் அமைச்சரவை ஆளுனருக்கு பரிந்துரைத்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆளுநரின் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் விளக்கியுள்ளதாக கூறிய அவர், விடுதலை செய்வது தொடர்பாக ஆளுநரின் கையெழுத்து அவசியம் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதாகவும், இந்த வழக்கில் உயர் நீதிமன்றமே பரிசீலிக்கலாம் எனவும் வாதிட்டார். பேரறிவாளன் மட்டுமல்லாமல் ராஜிவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரையும் முன் கூட்டி விடுதலை செய்வது தொடர்பான ஆவணங்களையும் ஆளுநரிடமிருந்து கடந்த ஆண்டு ஜனவரி 27ஆம் திகதியே குடியரசு தலைவருக்கு அனுப்பியதாக தெரிவித்தார்.

இந்த வழக்குகள் தொடர்பாக நேற்று முன்தினம் தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரி தலைமையிலான அமர்வின் போது நளினி மற்றும் ரவிசந்திரன் ஆகியார்களின் மனுக்களை தள்ளுபடி செய்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அவர்களை விடுதலை செய்ய முடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம் 142 அதிகாரத்தை பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது. அது போல நாங்கள் அதிகாரத்தை பயன்படுத்த முடியாது என்று அவர்கள் குறிப்பிட்டனர். இந்த அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே இருப்பதால், உயர் நீதிமன்றம் அந்த அதிகாரத்தை பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினார். தனது வெளியேற்றத்தை தெரிவிக்கும் முகமாக நடத்திய பத்திரிகை கலந்துரையாடலில் 2015 ஆம் ஆண்டு மீண்டும் இந்நாட்டிற்கு இரண்டு முக்கிய காரணங்களுக்காகவே வந்ததாக அவர் தெரிவித்தார்.

### மல்வானை வீடு கொள்வனவு தொடர்பான வழக்கு:

# பசில் ராஜபக்ஷ குற்றமற்றவரென நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டமை எவ்வாறு?

முதலாவது காரணம் தன்னால்தான் முன்னாள் ஜனாதிபதி பாதிப்புக்கு உள்ளானார் என சிலர் கூறும் குற்றச்சாட்டை சீர் செய்து அவருக்கு கௌரவமான ஒரு இடத்தை பெற்றுக் கொடுப்பதற்காக ஆகும்.

இரண்டாவது விடயம் தனக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளுக்கு முகம்கொடுத்து, தான் குற்றமற்றவர் என நிரூபிப்பதற்காகும். அவ்விதத்தில் பசில் ராஜபக்ஷ நீதிமன்றத்துக்கு முகம் கொடுத்து தனக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளிலிருந்து குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தில் இருந்து மல்வானை வீட்டை விலைக்கு வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கிற்கு நீதிமன்றத்தால் விடை கிடைத்துள்ளது.

சர்ச்சைக்குரிய மல்வானை சொத்து வழக்கில் பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோரை குற்றமற்றவர்கள் என விடுதலை செய்து கம்பஹா மேல்நீதிமன்ற நீதிபதி நிமல் ரணவீர ஜுன் 3 ஆம் திகதி தீர்ப்பினை தெரிவித்தார். அன்றையதினம் வழக்கின் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார்கள். அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஜி. ஏ.ஜி.வீரரத்ன, நவீன் மாரப்பன, சாலிய பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் ஆஜராகி இருந்தார்கள். முறைப்பாட்டிற்காக அரச சட்டத்தரணி கிறிஸங்க பெர்னாந்து ஆஜராகி இருந்தார்.

## மல்வானை கதை:

வழக்கு இலக்கம் HC 26/17 கீழ் கம்பஹா உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கு பசில் ரோகன ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசனுக்கு எதிரானதாகும். 17 ஏக்கர் காணியை விலைக்கு வாங்கி அதில் பெரிய சொகுசு வீடொன்றையும் மற்றும் நீச்சல் தடாகம் ஒன்றையும் அமைத்து அரச பணத்தை துஷ்பிரயோகம் செய்ததாக சட்டமா அதிபரால் மூன்று குற்றப் பத்திரங்களின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

## குற்றச்சாட்டுகள்:

2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி மற்றும் 2015 ஜுன் மாதம் 17ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த வழக்கில் இரண்டாவதாக குற்றம் சாட்டப்பட்டவரான திருக்குமார் நடேசனை பினாமியாக முன்வைத்து முதலாவது குற்றம் சாட்டப்பட்டவரான பசில் ராஜபக்ஷவினால் இலஞ்ச சட்டம் (19) ஆ,23(A) 70 பிரிவின் கீழ் குற்றம் ஒன்றோ அல்லது பலவோ புரிந்து சட்டவிரோதமாக சம்பாதித்த 250 மில்லியன் ரூபாவை செலவு செய்து கம்பஹா நீதிமன்ற அதிகார வரம்புக்கு உட்பட்ட மல்வானையில் காணியொன்றை விலைக்கு வாங்கி சொகுசு வீடொன்றையும் நீச்சல் தடாகம் ஒன்றையும், பண்ணை ஒன்றையும் அமைத்து அபிவிருத்தி செய்தது தொடர்பாகவே குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சட்டவிரோதமாக சம்பாதித்த அப்பணம் இலங்கையில் முதலீடு செய்யப்பட்டு அப்பணத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக சூழ்ச்சி செய்தமை மற்றும் அந்தக் குற்றத்தை மேற்கொள்வது தொடர்பாக 2011 இலக்கம்40 என்னும் நிதி துஷ்பிரயோகத்தை தடுக்கும் சட்டத்தின் திருத்தப்பட்ட 206 இலக்கம் 5 என்னும் நிதி துஷ்பிரயோகத்தை தடுக்கும் சட்டத்தின் 3(2) மற்றும் 3(1) பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தை செய்துள்ளதாக பசில் ராஜபக்ஷவுக்குஎதிராக குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. அத்துடன் அந்தக் குற்றத்திற்கு ஆதரவு வழங்கியது தொடர்பாக திருக்குமார் நடேசன் மீதும் மேலே குறிப்பிட்ட சட்ட விதிகளுக்கு அமைய குற்றம் சுமத்தப்பட்டது.

முன்னர் குறிப்பிட்டவாறு இந்த வழக்கு ஆரம்ப பிரதிவாதிகளான பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசனுக்கு எதிரான குற்ற முறைப்பாடுகளை நிரூபிப்பதற்காகவே நடத்தப்பட்டு வந்தது. முறைப்பாடாளர்களின் சாட்சிகள் அந்த அடிப்படையிலேயே விசாரிக்கப்பட்டனர்.

இந்த காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அனைத்து ஜோதிட நடவடிக்கைகள் சுமணதாச அபேகுணவர்தனவால் மேற்கொண்டதாக கூறப்பட்டிருந்தது. பசில் ராஜபக்ஷவின் ஒருத்தொட்ட காரியாலயத்துக்கு சுப நேரத்தை கணித்துக் கொடுத்தவர் சுமனதாச அபேகுணவர்தன ஆவார். இந்த அனைத்து சாட்சிகளும் வழக்குக்கு தொடர்பில்லாத சாட்சிகளாகும்.

## அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தம்:

பசில் ராஜபக்ஷவின் கம்பஹா ஒருதொட்ட காரியாலயத்தில் காரியாலய உதவியாளராக நடவடிக்கையில் ஈடுபட்ட கசுன் பிரியங்க என்பவரின் சாட்சி நீதிமன்றத்தின் விசேட கவனத்தை பெற்றது. அவர் அவ்வேளையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தற்காலிக காரியாலய பணியின் உதவியாளராக பணிபுரிந்த நபராவார். அவர் இரண்டு நாட்கள் நிதிக்குற்ற விசாரணை பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் தான் வாழ்வதற்காக தன்னுடைய வேலையை தவிர மேலதிகமாக சிறு சிறு வேலைகளை செய்வதாக கூறியிருந்தார். இந்த சொத்துக்களின் கட்டடநிர்மாண கலைஞர் முதித்த ஜயக்கொடியின் வேலைகளை செய்வதற்காக 2014 மார்ச் ஏப்ரல் மாதமளவில் அவர் அந்த காணி அமைந்துள்ள இடத்திற்கு சென்றதாகக் கூறியுள்ளார். அவர் பசில் ராஜபக்ஷ பற்றியோ நடேசன் பற்றியோ நீதிமன்றத்தில் எதுவும் கூறி இருக்கவில்லை.



சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கும் போது பொலிசார் தான் கூறியவற்றை பதிவு செய்யும் போது தான் கூறியவற்றை பதியாமல் அவர்களுக்கு தேவையானதையே எழுதிக் கொண்டதாகக் கூறினார். அதுபற்றி பொலிஸ் அதிகாரிகளுக்கு தெரிவித்தபோதும் தான் கூறாதது பற்றி எழுதி தன்னுடைய கையெழுத்தையும் பெற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

பொலிசார் பாரபட்சமாக முதலாவது குற்றம்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கும் நோக்கத்திலேயே சாட்சியை அச்சுறுத்தி உள்ளதாக தெரிகிறது என நீதிமன்றம் தெரிவித்தது. சாட்சியின் சாட்சியங்களிலிருந்து முதலாவது இரண்டாவது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பற்றி அல்லாது பொலிசாரின் முறையற்ற நடத்தை குறித்தே தெரிகிறது என நீதிமன்றம் தெரிவித்தது.

**சாட்சி சாட்சியமளிக்கும் போது பொலிசார் தான் கூறியவற்றை பதிவு செய்யும் போது, தான் கூறியவற்றை பதியாமல் அவர்களுக்கு தேவையானதையே எழுதிக் கொண்டதாகக் கூறினார். அதுபற்றி பொலிஸ் அதிகாரிகளுக்கு தெரிவித்த போதும் தான் கூறாததை எழுதி தன்னுடைய கையெழுத்தையும் பெற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்தார். பொலிசார் பாரபட்சமாக முதலாவது குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கும் நோக்கத்திலேயே சாட்சியை அச்சுறுத்தி உள்ளதாக தெரிகிறது என நீதிமன்றம் தெரிவித்தது**

வழக்கின் ஆரம்ப சாட்சி முறைப்பாட்டை முன்வைத்ததாக கூறப்படும் உப்புல் ராமவிக்ரம என்னும் ஒப்பந்தக்காரருடையது. குற்ற வழக்கு ஒன்றின் ஆரம்ப சாட்சி வழக்கை தாக்கல் செய்வதற்காக முதன் முறை முறைப்பாட்டை செய்தவராவார். வழக்கு அதன் அடிப்படையையே கொண்டிருக்கும். வழக்கின் அடிப்படை சாரமும் அதுவே. ஆனால் முறைப்பாட்டின் சாட்சியை நெறிப்படுத்தும் போது இடைநடுவில் இந்த சாட்சி கூறும் போது அவர் ஒரு போதும் இந்த வழக்கு தொடர்பாக முறைப்பாடொன்றை செய்யவில்லை என தெரிவித்தார்.

பிரச்சினை இருந்தது முதித்த ஜெயக்கொடி உடனாகும். அவருக்கு ஒப்பந்தத்தை வழங்கியது முதித்த ஜயகொடியே. முதித்த ஜெயக்கொடி ஒப்பந்தக்காரருக்கு 30 மில்லியன் ரூபாவை செலுத்தத் தவறியுள்ளார். நிதி குற்ற விசாரணைப் பிரிவின் தலைவராக அப்போது நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரி "காசை பெற்றுத் தருகிறேன்"என்று உறுதியளித்து அவரிடம் எதற்கோ கையெழுத்தை பெற்றுக் கொண்டதாக அவர் கூறினார். கையெழுத்து பெற்றுக் கொண்டாலும் அதில் என்ன எழுதியிருந்தது என தன்னுடைய சாட்சியத்தை பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அவருக்கு முதித்த ஜயக்கொடியிடமிருந்து பணத்தை பெறுவதே அவசியமாக இருந்ததை தவிர வேறு எந்த முறைபாட்டையும் செய்வதற்கு அல்ல என்றும் அவர்நீதிமன்றத்தில் கூறினார்.

சாட்சி நீதிமன்றத்தில் இன்னுமொரு விடயத்தையும் தெரிவித்தார். அவர் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு ஒரு பக்கத்திலான சிறிய சாட்சியத்தை அளித்ததாகவும் ஆனால் நீதிமன்றத்தில் அவருக்கு காட்டப்பட்டது நான்கு பக்கங்கள் கொண்ட நீண்ட சாட்சியமாகும் . அவர் அறிந்த வரையில் இவ்வாறு நீண்ட சாட்சியத்தை அவர் வழங்கவில்லை என உறுதி செய்தார். அடுத்த விடயம் கையெழுத்து. சாட்சி கூறுகையில், இந்த கையெழுத்து தன்னுடைய கையெழுத்தை ஒத்ததாக இருந்தாலும் நூற்றுக்கு நூறு வீதம் அது தன்னுடையகையெழுத்து அல்ல என தெரிவித்தார். முறைப்பாடு நபர் ஒருவரை தவறாக இட்டுச் சென்று அவரை ஆரம்ப முறைப்பாட்டாளராக முன்வைத்ததும் அல்லாமல் அவர் அளிக்காத சாட்சியத்துக்கு அவரது கையெழுத்தை களவாக இட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்.

முதித்த ஜயக்கொடியின் சாட்சியத்தின் நம்பிக்கையற்ற தன்மையாக ஒரு சிக்கலான சாட்சியம் முன் வைக்கப்பட்டுள்ளது. அது இந்த சொத்து தொடர்பாக முக்கிய பாத்திரத்தை நடித்த கட்டட நிர்மான கலைஞர் முதித்த ஜயக்கொடியினுடையது.

அவர் நீதிமன்றத்தில் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு தவறான சாட்சியத்தை அளித்த சாட்சியாவார். இந்தச் சாட்சி மிக நன்றாக தொழில்ஞானம் உடைய நபராவார். அவ்வாறான ஒருவர் தான் பொய் கூறியதை நீதிமன்றத்தின் முன் ஏற்றுக் கொண்டதை பாரதூரமான விடயமாக நீதிமன்றம் பார்த்தது. உண்மையான பொய்யான விடயங்கள் இரண்டும் கலந்து காணப்பட்டால் அந்த சாட்சியத்தை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்பதை சட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது. நீதிமன்றம் முதித்த ஜயக்கொடியின் சாட்சியத்தை அந்த புரிந்துணர்வுடனேயே விசாரித்தது.

பசில் ராஜபக்சவின் ஆலோசனையின் பேரில் இந்த காணியை திருக்குமார் நடேசனின் பெயரில் விலைக்கு வாங்க எடுக்கப்பட்ட விதம், பசில் ராஜபக்ஷவின் கருத்துக்கு அமைய 2011ஆம் ஆண்டில் சி ஐ சி நிறுவனத்துடன் இணைந்து மாதிரி பண்ணையை உருவாக்கும் விதம், 2013இல் பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில் பண்ணை ஒன்றை அமைக்க ஆரம்பித்த விதம் பற்றி அவர் நீதிமன்றில் தெரிவித்தார்.

அவர் குற்றம் சாட்டப்பட்டவர்களுடனோ அல்லது ஒப்பந்தக்காரர்களுடனோ எந்த ஒரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். பின்னர் ஒப்பந்தகாரருக்கும் தனக்கும் இடையே மோதல் ஒன்று ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். சாட்சியாளர் சாட்சியத்தை வழங்கும்போது காணப்பட்ட பரஸ்பர விரோதத்தை நீதிமன்றம் அவதானித்துள்ளது. அவரது சாட்சியத்தில் காணப்பட்ட நம்பிக்கையற்ற தன்மையை தெளிவுபடுத்த 30 க்கும் அதிகமான பக்கங்கள் வழக்கு அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருந்தது.

## தீர்ப்பு:

முறைப்பாட்டின் சாட்சிகளில் எதுவித சாதகமான உறுதிப்படுத்தல்களும் பிரதிவாதிகளுக்கு எதிராக நடைபெறவில்லை. ஆரம்ப சாட்சியமே தகர்ந்து போனது. ஆரம்ப சாட்சியாளர் இல்லாமல் குற்ற விசாரணை வழக்கொன்றை நடத்திச் செல்வதற்கான அடிப்படை இல்லை. இந்த நிலைமையின் கீழ் முறைப்பாட்டை நெறிப்படுத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு முதலாவது சாட்சியாளரின் சாட்சியத்தை தொடர்ந்தும் நெறிப்படுத்த முடியாது என நீதிமன்றத்தில் தெரிவித்ததோடு, மேலும் பட்டியலிடப்பட்டுள்ள சாட்சிகளை தொடர்ந்தும் நெறிப்படுத்தாமல் முறைப்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதாக தெரிவித்தார்.

முறைப்பாட்டை நெறிப்படுத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முறைப்பாடுமுடிவுக்கு வந்துள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவித்ததாவது பல சாட்சிகளை நெறிப்படுத்தி முறைப்பாட்டை நிறைவு செய்துள்ளதால் பிரதியின் வாய்மொழியிலான சாட்சியத்தை அழைப்பதா இல்லையா என நீதிமன்றத்தால் முடிவு செய்து உத்தரவு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

முறைப்பாட்டை நெறிப்படுத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தொடர்ந்தும் முறைப்பாட்டின் சாட்சிகளை நெறிப்படுத்த போவதில்லை என அறிவித்து முறைப்பாடு முடிவு பெற்றதாக நீதிமன்றத்துக்கு அறிவித்ததோடு நீதிமன்றத்தால் ஆராய வேண்டி இருந்தது முறைப்பாட்டின் பொறுப்பான உறுதி செய்யும் கடமையை நெறிப்படுத்தியுள்ள சாட்சியங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு உள்ளதா இல்லையா என்பதாகும். அதாவது முதலாவது குற்றஞ்சாட்டப்பட்டவரான பசில் ராஜபக்ஷவால் முறையற்ற விதத்தில் சம்பாதித்த பணத்தை பயன்படுத்தி இரண்டாவது குற்றஞ்சாட்டப்பட்டவரான நடேசன் என்பவரின் பெயரால் காணியை விலைக்கு வாங்கி வீடு ஒன்றை அமைத்து அதன்மூலம் பண துஷ்பிரயோகத்தை தடுக்கும் சட்டத்தை மீறி உள்ளாரா என்பதை உறுதி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலாகும்.

நீதிமன்றத்தின் அனைத்து பகுப்பாய்வுகளானது நிதி துஷ்பிரயோகத்தை தடுக்கும் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு குற்றவாளிகளாக்கி குற்றத்தின் பொறுப்பை சுமத்துமளவுக்கு சாதாரண சந்தேகங்கள் இன்றி முறைப்பாட்டை உறுதிசெய்ய தவறி உள்ளதாக தெரிவிக்கின்றது.

"மேலும் இந்த வழக்கில் பிரதிவாதி வாக்குமூலம் அளிக்க அழைக்கப்படத் தேவையில்லை. அதனால் குற்ற விசாரணை வழக்கு விதிமுறை சட்டத்தின் 200(1) நடவடிக்கை மேற்கொண்டு குற்றம் சுமத்தப்பட்டவர்களை இந்த வழக்கிலிருந்து குற்றமற்றவர்களாக விடுதலை செய்கிறேன்" என உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை வழங்கினார்.

*(நீதிமன்ற வழக்கு அறிக்கையின் உதவியுடன்)*

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

---


# நாமக்கல் என்றதும் இலக்கியவாதிகளின் நினைவுக்கு வருபவர் சின்னப்ப பாரதி

## மூத்த முற்போக்கு எழுத்தாளர் குறித்த நினைவுகள்

தமிழ்நாட்டில் நாமக்கல் என்றவுடன் நினைவுக்கு வருபவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம். ஆனால் சமகாலத்தில் நினைவுகளில் தங்கியிருப்பவர் படைப்பிலக்கியவாதி கு. சின்னப்பபாரதி.

இம்மாதம் 13 ஆம் திகதி அவர் மறைந்து விட்டார் என்ற செய்தி கிடைத்த போது, அவர் குறித்த நினைவுகள் மனதில் எழுந்தன. இறுதியாக 2013 ஆம் ஆண்டு அவரை அவரது ஊரில்தான் சந்தித்தேன். அதற்கு முன்னரும் அங்கு சென்று திரும்பி அவர் பற்றி எழுதியிருக்கின்றேன்.

நமக்கல்லில் அவரைத் தேடிச் செல்லும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் அவரது அந்த செல்லம்மாள் இல்லத்தின் வாசலில் ஒரு புதிய அனுபவத்தை எதிர்கொள்வார்கள்.




நான் முதல் தடவை நாமக்கல் பஸ் நிலையத்தில் இறங்கி, அங்கே நின்ற ஒரு ஓட்டோ சாரதியிடம், அவரது பெயரைச் சொன்னதும், " ஏறுங்க சார்" என்று மாத்திரம்தான் சொன்னார்.

அந்த இல்லத்தை நெருங்கும் போது, அந்த ஓட்டோவின் ஒலி கேட்டு விரைந்து வாசலுக்கு வந்தார் சின்னப்ப பாரதி. ஓட்டோ சாரதிக்கு நான் பணம் கொடுப்பதற்கு முன்பே அவர் கொடுத்து அனுப்பி விட்டார்.

தன்னைத் தேடி ஓட்டோவில் வரும் எவருக்கும் சின்னப்ப பாரதியே சாரதிக்குரிய பணத்தை கொடுத்து விடுவார். அங்கு பேரம் பேசுதல் நடக்காது. அவ்வாறு சாதாரண ஓட்டோ சாரதிகளுடனும் தோழமையை பேணியவர்தான் சின்னப்ப பாரதி.

இலங்கையில் நாம் 2011 ஜனவரியில் நடத்திய முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு எதிராக தமிழகத்திலிருந்து குரல் ஒலித்த வேளையில், அதனை அசட்டை செய்து விட்டு மனசாட்சியின் பேரில் கலந்து கொண்டவர்தான் சின்னப்ப பாரதி.

ஈழத்து இலக்கிய உலக நண்பர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்.




அமரர் சின்னப்ப பாரதியுடன் கட்டுரையாளர் முருகபூபதி

அவரை அவரது ஊரிலேயே சந்திப்பதற்காக சென்ற முதல் பயணத்தின் போது, இலங்கையிலிருந்து புறப்படும் தறுவாயில் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அந்த இல்லம் அமைந்துள்ள பிரதேசம் ரம்மியமானது. அருகே அழகிய குன்று. சில கணங்கள் அந்த இல்லத்தின் சுற்றுப்புறத்தை ரசித்தேன். ஏற்கனவே பல இலக்கியவாதிகளதும் இடதுசாரி அரசியல், தொழிற்சங்கவாதிகளினதும் கால் பதிந்த இல்லம்.

சின்னப்பபாரதியின் பிரத்தியேக அறை சிறிய நூலகமாகவே காட்சி தரும். அந்த இல்லத்தின் பின்புறம் சோலையாக காய், கனிகளுடனும் உயிர்ச்சத்துகள் நிரம்பிய கீரை வகைகள் பயிரிடப்பட்ட தோட்டமாகவும் காட்சியளிக்கிறது.

பல மணிநேரங்கள் சின்னப்ப பாரதியுடன் உரையாடியிருக்கிறேன். அத்துடன் அந்த இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருந்து அவரது குடும்பத்தினரின் அன்பான உபசரிப்பிலும் திழைத்திருக்கின்றேன்.

அவரது வாழ்வும் பணிகளும் இடதுசாரி இயக்கத்துடனும் முற்போக்கு இலக்கிய முகாமுடனும் பின்னிப் பிணைந்திருந்தன. தமிழில் அவரால் படைக்கப்பட்ட பல படைப்புகள் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இந்திய மொழிகளில் மட்டுமன்றி ஐரோப்பிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. அவரது பெயரில் ஒரு அறக்கட்டளை உருவாக்கப்பட்டு கடந்த பல ஆண்டுகளாக விருதுகளும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. தமிழகத்தவர் மட்டுமன்றி இலங்கை மற்றும் புகலிட நாடுகளைச் சேர்ந்தவர்களும் அந்த விருதுகளையும் பணப்பரிசில்களையும் பெற்றிருக்கின்றனர்






சின்னப்ப பாரதியின் 'பவளாயி' நாவலை உஸ்பெக்கிஸ்தான் மொழிக்கு மொழிபெயர்த்துள்ள லோலா மக்தூபா என்ற பெண்மணி உஸ்பெக்கிஸ்தானில் அமைந்துள்ள தாஸ்கண்ட் ஸ்டேட் இன்ஸ்ரிரியூட் ஒஃப் ஓரியண்டல் ஸ்டடிஸ் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.



அவரும் நாமக்கல்லுக்கு வந்துள்ளார். டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் தமிழ் இலக்கியம் கற்றுள்ளார்.

சின்னப்ப பாரதியின் பவளாயி நாவலை உஸ்பெக் மொழிக்குத்தந்துள்ள அவர், தான் மேலும் தமிழைக் கற்றுக் கொண்டு, உஸ்பெக் இலக்கியங்களை தமிழுக்கும் தமிழ் இலக்கியங்களை உஸ்பெக் மொழிக்கும் பெயர்ப்பதுதான் தனது இலக்கியப்பயணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சின்னப்ப பாரதியின் 'சர்க்கரை' நாவல் இலங்கையில் சிங்கள மொழியில் அறிமுகமானது. இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளிடத்தில் பேரன்பும் அபிமானமும் கொண்டிருந்த அவர், உபாலி லீலாரத்தின முதலான சிங்கள படைப்பாளிகளிடத்திலும் அன்பும் மரியாதையும் செலுத்தியவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்படிப்பட்டவர்களிடத்தும் தான் காணும் தவறுகளை எடுத்துரைக்கத் தவறாத இயல்பும் அதேவேளை தனது தவறுகளை எவரேனும் சுட்டிக்காட்டினால் அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் அவரிடம் இருந்தது. அதுவே அவரது வழுவாத கொள்கை.

1935 இல் சாலைவசதியும் மின்சாரமும் இல்லாத, ஆனால் இயற்கை எழில்கொஞ்சும் பொன்னரிப்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர். கலைஞர் கருணாநிதிதான் செம்மொழி அந்தஸ்துக்கு பாடுபட்டவர் என்றுதான் கேள்வியுற்றோம்.

ஆனால், பலவருடங்களுக்கு முன்பே, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வேண்டுமென்று கோரி டில்லியில் பிரதமரை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்திருக்கிறது. அந்தத் தூதுக்குழுவில் அங்கம் வகித்தவர் சின்னப்பபாரதி.

இரண்டு பெண்பிள்ளைகளுக்குத் தந்தை. சற்று வசதியோடு வாழ்ந்தாலும் எளிமையை கடைப்பிடித்தவர். அன்னாரின் அன்புத் துணைவியார் செல்லம்மாள் அவர்களதும் அருமை மகள்மாரினதும் துயரத்தில் பங்கேற்கின்றேன்.

**லெ.முருகபூபதி...**
*அவுஸ்திரேலியா*

## நாட்டில் மேலும் 03 ... (03ஆம் பக்கத் தொடர்)

நீடிக்க வேண்டியேற்படும் என மின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 300 மெகாவோட் மின்சாரம் நாளை மறுதினம் முதல் தேசிய மின்கட்டமைப்பிற்கு கிடைக்காது போகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய திருத்தப் பணிகளால் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இரண்டாம் மின்பிறப்பாக்கியின் தொழிற்பாடுகள் நிறுத்தப்படவுள்ளமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தப்பணிகள் இரண்டு மாதங்கள் இடம்பெறும். இதனால் தினசரி மின்வெட்டு நேரம் 4 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கனடாவில் காலமான... (03ஆம் பக்கத் தொடர்)

இருந்ததாகவும் சக ஊழியர்கள் கூறுகின்றனர். மதியழகன் இலங்கையில் பிறந்து ஒட்டாவாவில் வளர்ந்தார், அவரது குடும்பத்தில் இளைய பிள்ளையாவார். எவ்வாறாயினும், இந்த விபத்து அவர் கடமையில் இல்லாதபோது நிகழ்ந்ததாக ஒட்டாவா பொலிஸார் நேற்று முன்தினம் காலை அறிவித்துள்ளனர். இவரது மறைவு காரணமாக அனைத்து ஒட்டாவா காவல்துறை கட்டிடங்களிலும் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன. விபத்து தொடர்பில் ஒன்ராறியோ மாகாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அருகிலுள்ள ... (03ஆம் பக்கத் தொடர்)

இருப்பிடத்துக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சீனாவிடமிருந்து அரிசி நன்கொடை; 10 நாட்களுக்குள் நாட்டுக்கு கிடைக்கும்

### சீன தூதரகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீனா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவுள்ள அரசியின் ஒரு தொகை எதிர்வரும் 10 நாட்களுக்குள் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது.

சீன அரசாங்கமானது 500 மில்லியன் பெறுமதியான அரிசியை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ள நிலையில் அதன் முதலாவது தொகை அரிசி எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டுக்கு கிடைக்கும் என இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று முன்தினம் சீன தூதரகம் ட்விட்டர் பதிவு ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன் அதற்கிணங்க அதில் ஒரு தொகை அரிசியை கொண்டு வரும் கப்பல் எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் இரண்டாவது தொகை அரிசி எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சீனா நன்கொடையாக வழங்கவுள்ள அரிசி ஆறு கட்டங்களாக இலங்கைக்கு கிடைக்கவுள்ளன. அதற்கிணங்க மேலும் 4 தொகுதி அரிசி பின்னர் நாட்டுக்கு கிடைக்கும் என்றும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

அதற்கு மேலதிகமாக பாடசாலை உணவுத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் சீன தூதுவராலயம் மேலும் தெரிவித்துள்ளது.(ஸ)

## இரு வார காலம்...

2 வாரங்களுக்கு ஒன்லைன் மூலம் மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பும் வரை இரண்டு வார காலத்திற்கு இந்த வேலைத்திட்டம் அமுலில் இருக்கும் என ஜனாதிபதி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. வங்கிகள் , மருத்துவம், எரிபொருள் விநியோகம், உணவுப் பொருள் விநியோகம் உட்பட்ட அத்தியாவசிய சேவைகள் வழமை போல இயங்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமது பிரதேச பாடசாலைகளில்...

மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கல்வியமைச்சு அதிகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய இரண்டு மாகாணங்களுக்கு இடையில் மாகாண சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் தற்காலிகமாக இடம் மாறி சேவையாற்றுவதற்கு அந்தந்த மாகாணங்களின் அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரது அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## சிறுவருக்கான மருந்து வகைகள்...

மருந்து தட்டுப்பாடு காரணமாக சிறுவர்களை அரச வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்ல பெற்றோர்கள் பின்வாங்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தற்போதைய நிலையில், சிறந்த சத்தான உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அத்துடன், பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பிலும் பெற்றோர் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் தஞ்சமடைய...

வெள்ளிக்கிழமை அதிகாலை 7 பேர் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். மன்னாரில் இருந்து படகு மூலம் இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரே இவ்வாறு அகதிகளாக தப்பிச் சென்றுள்ளனர். இவ்வாறு சென்ற 7 பேரையும் ஏற்றிச் சென்ற படகு இந்தியாவின் தமிழகம் தனுஷ்கோடி ஒன்றாம் தீடையில் இறக்கிய பின்பு திரும்பிச் சென்றுள்ளனர். குறித்த 7 பேரும் திருகோணமலை, மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படும் நிலையில் இந்திய கரையோர காவல்படையினரால் இவர்கள் மீட்கப்பட்டு இராமேஸ்வரம் கொண்டு சென்றுள்ளனர்.

## 13ஐ முழுமையாக...

உள்வாங்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,..

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள சிலரும் 21வது திருத்த சட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்படுவதுடன் அந்த சட்ட திருத்தத்தின் குழுவில் தாங்களும் உள்ளதாக பெருமையாக சொல்லி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சம்பிக்க மீதான வழக்கு...

விபத்துக்குள்ளாக்கிய குற்றச்சாட்டு தொடர்பில் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களை ஆராய்ந்த நீதிபதி, எதிர்வரும் 27 ஆம் திகதி வழக்கை விசாரணைக்கு அழைக்க உத்தரவிட்டார்.

## உலக உணவுத் திட்டத்தின் மூலம் ...

பவுச்சர்களை பெற்றுக் கொடுக்க இத் திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கு உணவு வவுச்சர்களை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 30 இலட்சம் பேருக்கு உணவு அல்லது அதற்கான நிதியைப் பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்தவுள்ள இந்தத் திட்டத்திற்காக 60 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் 2000 கர்ப்பிணித் தாய்மாருக்கு 15,000 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் வறுமை நிலையில் உள்ள நூற்றிற்கு 22 வீதமான குடும்பங்கள் உணவைப் பெற்றுக் கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் அவர்களுக்கு உதவி வழங்க உலக உணவுத்திட்டம் மேற்படி வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கான தனது...

பதிவில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஜி ஜின்பிங், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதுடன் தற்போதைய சூழ்நிலையில் இறப்பர் அரிசி உடன்படிக்கை, தன்னிறைவு, ஐக்கியம், பரஸ்பர உதவி ஆகியவற்றின் உணர்வினை வலியுறுத்தினார் என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## நாட்டில் ஒருபோதும்...

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஒரு மாதத்திற்கு 500 தொடக்கம் 1000 மெட்ரிக் தொன் அரிசியே விநியோகிக்கப்படுகிறது. எனினும், அதனை 10 ஆயிரம் மெட்ரிக் தொன்னாக அதிகரிக்க நாம் ஆலோசனை வழங்கியுள்ளோம். தேவைக்கு ஏற்ப சதோச மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகளில் அரிசியை பெற்றுக்கொள்ள முடியும். நான் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு முன் 248,000 ஹெக்டேயர் நிலப்பரப்பே விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது 470,000 ஹெக்டேயராக அதிகரித்துள்ளது. எனவே நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது. மக்கள் வீணாக அச்சப்படத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## யாத்திரை மீது மக்களது ...

செய்து கொண்டிருந்தாலும் ஹஜ் கட்டண அதிகரிப்பின் காரணமாக இவ்வருடம் மக்கள் ஹஜ் கடமையில் ஆர்வம் குறைந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து முதலாவது தொகுதி ஹஜ் பயணிகளை ஏற்றிக் கொண்டு எதிர்வரும் 1 ஆம் திகதி விமானம் பயணிக்கவுள்ளது. எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை ஹஜ் விமான சேவைகள் இடம்பெறும்.

ஜூலை 15 முதல் 20 ஆம் திகதிக்குள் இலங்கை ஹஜ் யாத்திரிகர்கள் கடமையை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பவுள்ளனர் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் தெரிவித்தார் ஹஜ் யாத்திரை தொடர்பில் அவர் தொடர்ந்தும் கூறியதாவது,..

ஹஜ் யாத்திரிகர்கள் சவூதி அரேபியாவின் சட்ட விதிகளைப்பேணி தமது கடமைகளை முன்னெடுக்க வேண்டும்.

சவூதி அரேபியாவிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் இலங்கை ஹாஜிகளின் நலன்களைக் கவனிப்பார்கள்.

ஹஜ் முகவர்கள் தாம் அறவிடும் கட்டணங்களுக்கு அமைவாக யாத்திரிகர்களுக்கு சேவைகளை வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். தமது யாத்திரைக்கான முகவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தெரிவு இவ்வருடம் ஹஜ் யாத்திரிகளிடமே வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## எரிபொருளை பெற முஸ்லிம்...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்காரே இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கும் பிரதமரே நாட்டுக்குத் தேவை.விடுமுறையை கழிப்பதற்காகவே சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். ஆனால் எமது நாட்டில் இத்தனை வரிசைகள் காணப்படுகின்றன. எனவே இந்த வரிசைகளைப் பார்த்த பின்னரும் நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருவார்களா எனவும் கேள்வி எழுப்பினார். தற்போது எரிபொருளுக்கு செலவிடப்படும் நிதியை உரத்தை கொள்வனவு செய்ய செலவிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவ்வாறு செய்வதால் நாட்டில் ஏற்படவிருக்கும் ஒரு தட்டுப்பாட்டை தடுக்க முடியும் எனவும், கொழும்பிலுள்ள விகாரமாதேவி பூங்கா உள்ளிட்ட இடங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கொழும்பில் உள்ள காணிகள் பெறுமதியுடையவை. அது மாத்திரமல்லாது பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் விவசாய நடவடிக்கைகள் என கூறிக்கொண்டு கொழும்பில் உள்ள பெறுமதிமிக்க காணிகளை அரசாங்கத்தின் நண்பர்களுக்கு வழங்க திட்டங்கள் தீட்டப்படுகின்றனவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## இலங்கையில் வேகமாக பரவும்...

கபில கன்னங்கர தெரிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் முதல் இது வரையான காலம் வரை இன்புளுவன்சா நோய் தாக்கத்தினால் 14 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். ஏப்ரல் மாதத்தில் 11 நோயாளர்களும், மே மாதத்தில் 6 நோயாளர்களும், ஜுன் மாதத்தில் 103 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். இந்த நோய் தாக்கத்தினால் அதிகளவில் பெண்களே பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, 75 பெண்களும், 33 ஆண்களும், 12 சிறார்களும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த இன்புளுவன்சா நோய் தொற்றினால் உயிரிழந்தவர்கள் அனைவரும் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் 11 பெண்களும், 3 ஆண்களும் அடங்குவதாக அவர் கூறுகின்றார்.

இது இன்புளுவன்சா ஏ என அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் வைரஸ் தொற்று தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஜுட் ஜயமஹ தெரிவித்துள்ளார்.

இந்த நோய் தாக்கத்திற்கு அதிகளவில் வயோதிபர்கள் மற்றும் கர்ப்பணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். காய்ச்சல், இருமல், தடிமல் போன்ற நோய் அறிகுறிகள் இந்த வைரஸ் தாக்கத்தினால் ஏற்படும் என அவர் குறிப்பிடுகின்றார்.

## எனது திட்டத்திற்கு அனுமதி தந்தால் ...

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், போக்குவரத்து உள்ளிட்ட சங்கங்கள் இணைந்து எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் கேட்டுள்ளார்கள்.

வட மாகாணத்தில் இருக்கக்கூடிய உரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை அதேபோன்று அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறை நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டுள்ள அதே நேரத்தில், வடமாகாணமும் அதற்கு விதிவிலக்கு இல்லாமல் அதற்கு முகம் கொடுத்த வருகின்றது.

இந்த வகையில் எங்களது நீண்ட கால திட்ட முன்மொழிவாக இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதாகும்.

பாண்டிச்சேரி, காரைக்கால் அல்லது நாகபட்டணத்திலிருந்து நேரடியாக காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குமதி செய்வதன் ஊடாக விரைவாகவும், நியாயமான முறையில் எமது மக்களிற்கு கிடைக்கக்கூடிய சூழலை உருவாக்குவோம்.

எரிபொருள், உரம், சீமெந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றை நீக்கி வெகு விரைவில் மக்களிற்கு அது கிடைக்க செய்வோம். என தெரிவித்தார்.

## எரிபொருளை முறையாக...

பெறப்படவுள்ள எரிபொருள் கையிருப்புக்களை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முறையாக விநியோகிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து போதியளவு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பெற்றோல், டீசல் மற்றும் எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் நேற்று (17) முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வழங்குனர்களுடனான நீண்ட கால எரிபொருள் விநியோக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான சாத்தியம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் சுற்றுலா பேருந்துகள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையின் கீழ் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் தொடர்ந்தும் எரிபொருளை விநியோகிக்கவும், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டது.

தற்போதுள்ள எரிவாயு கையிருப்புக்களை முறையாக விநியோகிப்பதற்கும் போதுமான எரிவாயு கொள்ளளவை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## IMF பிரதிநிதிகள் திங்கள் ...

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் உதவியை பெற்றுக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அந்த நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டுக்கு விஜயம் செய்ய வுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த பேச்சுவார்த்தையில் முக்கிய பிரதிநிதியாக தாமும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு செய்தி சேவையொன்றிற்கு வழங்கிய பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நட்பு நாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தால் நாட்டில் தற்போது நிலவும் மோசமான நெருக்கடி நிலையைத் தவிர்த்திருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கடனை மீள செலுத்துவதற்கான கால அவகாசம் தொடர்பிலான தீர்மானத்தை ஒரு வருடத்திற்கு முன்பே மேற்கொண்டிருக்க முடியும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தாமதமான தீர்மானம் தவறானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமது பதவிக்காலம் தொடர்பில் இதன்போது குறிப்பிட்டுள்ள அவர், முழுமையான ஆறு வருட காலமும் தாம் மத்திய வங்கி ஆளுநர் பதவியை வகிக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(ஸ)

## பிள்ளைகளை ஒருபோதும் ...

கொன்றுவிட வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளை வளர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டால் அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் பிள்ளைகளை ஒப்படைக்குமாறு கோரியுள்ளார்.

இவ்வாறு ஒப்படைத்தால் பெற்றோருக்கு பொலிஸார் உதவுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் களனி பிரதேசத்தில் தாய் ஒருவர் ஐந்து வயதான பிள்ளையை களனி ஆற்றில் வீசி வீட்டு தாமும் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்திருந்தார். அயலவர்கள் குறித்த பெண்ணை காப்பாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இறக்குமதிக்கு கடன்பத்திரம்...

மில்லியன் அமெரிக்கன் டொலருக்கான கடன் பத்திரம் மக்கள் வங்கியினால் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு இவ்வார இறுதியில் பெற்றோலை சந்தைக்கு வினியோகிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் எரிபொருளை பங்கீட்டு முறைப்படி வழங்குவதற்கான அட்டையை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க இந்த பங்கீட்டு அட்டை மூலம் ஒரு நபருக்கு 100 லீட்டர் எரிபொருள் வழங்கப்படுமானால் அதில் 60 லீட்டர் எரிபொருளை பதிவு செய்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலமும் மீதமான 40 லீட்டர் எரிபொருளை நாட்டின் வேறு எந்த பகுதியிலும் உள்ள எரிபொருள் நிலையத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இந்த முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்:

நாட்டிற்கு தற்போது கிடைத்துள்ள 40,000 மெற்றிக் தொன் டீசலுடன் கையிருப்பில் உள்ள எரிபொருளையும் உள்ளடக்கியதாக எரிபொருள் விநியோகத்தை தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

இரண்டு நிறுவனங்களிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில் தற்போது அது தொடர்பான கேள்விப் பத்திரம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கான கடன் பத்திரத்தை மக்கள் வங்கி திறந்துள்ளது.எரிபொருள் கொள்வனவிற்காக இதுவரை 110 புதிய யோசனைகள் கிடைத்துள்ளன.

அவற்றை ஆராய்ந்து உயர்மட்ட அதிகாரிகள் குழு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அத்துடன் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான முன்னோடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ)

## உணவு நெருக்கடியை தீர்க்க...

உணவு நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் அவர் தெரிவித்துள்ளதுடன்

அந்த வகையில் வயது முதிர்ந்தோர் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த உணவு நெருக்கடியை சாத்தியமாக எதிர்கொள்ளும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தலைமையில் குழுவொன்றை நியமிக்குமாறும் அந்த குழுவில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கலாநிதி ஹர்ஷ டி சில்வா மற்றும் ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு, விவசாய அமைச்சு, இராணுவம், தனியார் துறை உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அந்த குழுவின் மூலம் தயாரிக்கப்படும் திட்டத்தை இரண்டு வாரங்களுக்குள் தமக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய 336 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு தலைமைத்துவம் வழங்குவதற்காக அந்தந்த தொகுதியில் உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏனையவற்றை அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், தனியார் பிரிவுக்கும் பகிர்ந்தளிக்க முடியும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். அதில் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பட்டதாரிகளையும் இணைத்துக்கொள்ள முடியும் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேவேளை மீனவர்களுக்கு தேவையான எரிபொருள்,சமையல் எரிவாயு மற்றும் விவசாயிகளுக்கு தேவையான எரிபொருள் வழங்குதலில் முக்கியத்துவம் வழங்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் குறிப்பாக சிறுவர் பராமரிப்பு இல்லங்கள், முதியோர் இல்லங்கள், வலது குறைந்தோர் பராமரிப்பு இல்லங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி நிகழ்வில் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, நளின் பெர்னாண்டோ, ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க, முன்னாள் அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, திஸ்ஸ அத்தநாயக்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரிஷாட் பதியுதீன், எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

(ஸ)




# வவுனியாவில் எரிபொருள் கோரி ஏ 9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

## இருவர் கைது, கண்ணீர் மல்க கோரிக்கை





**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் எரிபொருள் கோரி ஏ 9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் செயலி மூலம் வெளியாகிய தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் (16.06) இரவு முதல் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பலர் நீண்ட வரிசையில் நின்றனர். ஆனால், நேற்று (17.06) காலை 10.30 வரை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வராமையால் வழங்கப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பழைய பஸ் நிலையம் முன்பாக ஏ 9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை வீதியை விட்டு அகற்றியதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட இருவரை கைது செய்தனர்.

அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடனும் கலந்துரையாடினர். இதன்போது எரிபொருள் இன்னும் வந்து சேரவில்லை என அவர்கள் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றிய பொலிஸார், கைது செய்யப்பட்ட இருவரிடமும் வாக்கு மூலங்களைப் பெற்ற பின்னர் எச்சரித்து விடுதலை செய்தனர்.

இதேவேளை, முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இரவு முதல் நிற்பதாகவும் இரண்டு லீற்றர் பெற்றோலாவது தாருங்கள் என கண்ணீர் விட்டு அழுதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடி அரசியல் கைதிகளுக்கும் சிரமம்



**வவுனியா விசேட நிருபர்**

பொருளாதார நெருக்கடி காரணமாக அரசியல் கைதிகளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட அரசியல் கைதியொருவர் நேற்று (17.06) தெரிவித்தார்.

வழக்கொன்றுக்காக வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு மூன்று அரசியல் கைதிகள் ஆயுதம் தாங்கிய காவலர்கள் சகிதம் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் வழக்கு நிறைவின் பின்னர் அவர்களை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லும் பொருட்டு வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்லும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியால் அரசியல் கைதிகளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதனால் தமிழ் மக்கள் அனைவரும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் ஆட்கொணர்வு மனுவுக்கான தீர்ப்பு

## சட்டத்தரணி இரட்ணவேல்

**வவுனியா விசேட நிருபர்**



இறுதி யுத்தத்தில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் உட்பட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வழங்கப்படவுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

நேற்று (17.06) வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில் மீண்டும் திகதி இடப்பட்டதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

யுத்தத்தின் கடைசிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்டோர் சரணடைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று வழங்கப்படவிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 7 ஆம் மாதம் முதலாம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படுமென நீதிமன்றத்தினால் கூறப்பட்டுள்ளது.

ஆகவே ஜூலை மாதம் முதலாம் திகதி நாம் தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம் என தெரிவித்தார்.

# பூநகரியில் 12 மணி நேர நீர் வெட்டு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை 12 மணித்தியாலய நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர்.

பூநகரி வாடியடிச் சந்தியில் அமைந்துள்ள நீர்த் தாங்கியில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் மற்றும் பராமரிப்பு பணிகள் காரணமாக திங்கட்கிழமை மாலை 6 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை(21) காலை 6 மணி வரை நீர் வெட்டு அமுல்படுத்தப்படும். எனவே பொது மக்கள் இதனை கருத்திற்கொண்டு முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

# பொருளாதார நெருக்கடியில் பாடசாலைகளை இயக்குவது கேள்விக்குறியாகியுள்ளது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

**யாழ்.விசேட நிருபர்**

தற்போதுள்ள சூழ்நிலையில் பாடசாலைகளை தொடர்ந்தும் இயக்குவது கேள்விக்குறியாகவுள்ளது. இதனை அரசாங்கம் உணராமல் இருப்பது வேதனையாகவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில், இன்றைய மோசமான நிலைமை இலங்கையில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்தே செல்கின்றன. ஆனாலும் அப்பொருட்களைப் பெறமுடியாமல் உள்ளது. அதன் காரணமாக சகல துறைகளுமே ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை என்பது மாணவரை மையப்படுத்திய நிறுவனமாகும். மாணவர் துயரப்பட்டு பாடசாலைக்கு வந்து கற்கமுடியாது. அவர்களுக்கு கல்வியூட்டும் கல்வியியலாளர்கள் குடும்பங்களோடு இணைந்தவர்கள். அவர்கள் ஏனைய மக்களைப் போன்று பல்வேறு சிரமங்களையும் சுமந்தவர்களாக உள்ளனர். அவை எவற்றையும் பொருட்படுத்தாமல் பணியை தர்மமாகக் கருதி பணியாற்றும் அவர்கள் கடமைக்கே செல்லமுடியாது தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து மார்க்கங்கள் எதுவுமே சீராக இல்லை. தாமாக செல்வதற்கும் வழியில்லை. இந்நிலையில் பாடசாலைகளை தொடர்ந்து இயக்க முடியாது. என்பதனை அரசாங்கம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. மீண்டும் தோற்றுப்போன இணையவழி முறையை அரசாங்கம் புகுத்தி நாட்டிலுள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இன்னும் சுமையை ஏற்படுத்தப்போகின்றது.

ஆகையால் நாம் முன்வைத்த மாணவர், ஆசிரியர்களுக்கான போக்குவரத்து மார்க்கங்களை இலவசமாக்குவதே பாடசாலைகளை தொடர்ந்தும் இயக்க ஒரேவழி. இதைவிட தொடர்ச்சியாக வரவழைப்பதைத் தவிர்த்து சுழற்சிமுறையை பயன்படுத்த வேண்டும் என கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# பருத்தித்துறையில் முகமூடி கொள்ளை நால்வர் கைது – மூவரை தேடி வலைவீச்சு

**யாழ்.விசேட நிருபர்**

பருத்தித்துறை துன்னாலை மடத்தடியில் நள்ளிரவு வேளை வீடு உடைத்து அங்கிருந்தவர்களை தாக்கி விட்டு 12 பவுண் நகைகளை கொள்ளையிட்ட மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பலாலி பகுதியில் வைத்து 36 வயதுடைய ஒருவரும் முடவத்தையைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

நள்ளிரவு வேளை வீடு உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த 6 பேருக்கு பெருங்காயங்களை ஏற்படுத்தி 12 தங்கப் பவுண் நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை உடமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் வீட்டுக் கதவினை உடைத்து வாள்களுடன் உள்நுழைந்த 6 பேர் கொண்ட கும்பல் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராக்களை சேதப்படுத்தியதுடன் வீட்டிலிருந்த 6 பேருக்கு பெருங்காயங்களை ஏற்படுத்தியுள்ளனர். இதன்போது



12 தங்கப் பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டு தப்பித்துசென்றுள்ளனர். சம்பவத்தையடுத்து படுகாயமடைந்தவர்கள் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் விஜித் லியனகேயின் பணிப்புக்கு அமைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்களுடன் மேலும் ஒர் ஆணும் கொள்ளையிட்ட நகைகளை உடமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகளில் ஐந்தரைப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மூவர் தேடப்பட்டு வருகின்றனர். சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாள்களும் கைப்பற்றப்பட்டன.

# நெடுங்கேணியில் மர கடத்தல் முயற்சி முறியடிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**



நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைனாமடு காட்டுப்பகுதியில் மர கடத்தல் முயற்சி வட்டார வனவள அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நைனாமடுவில் ஒதுக்கப்பட்ட காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மரங்கள் வெட்டி கடத்தப்படுவதாக வட்டார வனவள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட்டார வனவள அதிகாரி சமரதுங்க தலைமையிலான உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேடுதலில் 6 இலட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் காட்டுப்பகுதியில் வெட்டப்பட்டு ஏற்றுவதற்கு தயாராக காணப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வட்டார வனவள அலுவலக அதிகாரிகளின் வருகையையடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இந்நிலையில் மரக்குற்றிகளை வட்டார வனவள அலுவலகத்திற்கு ஏற்றி சென்றுள்ளனர். இதுகுறித்து மேலதிக விசாரணைகள் நெடுங்கேணி பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மர குற்றிகளையும், டிப்பர் வாகனத்தையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மாணவியை துன்புறுத்திய ஆசிரியைக்கு பிணை

**யாழ்.விசேட நிருபர்**

சித்தன்கேணி பாடசாலையொன்றில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவியை அடித்துத் துன்புறுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆசிரியை மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆசிரியை எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதி மாணவி அடித்துத் துன்புறுத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

சித்தன்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த 7 வயது மாணவியே அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளார்.

கடுமையான மன அழுத்தத்துக்கு உள்ளாகிய மாணவிக்கு உளநல மருத்துவ வல்லுநரினால் உளநல சிகிச்சை வழங்கப்பட்டது. மாணவியின் குடும்பத்துக்கு பண உதவியை வழங்கி இணக்கமாக முடிக்க பாடசாலை நிர்வாகம் முயற்சித்தது. இந்த நிலையிலேயே மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் ஆசிரியை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.




# இளைஞர்களை இலக்கு வைத்து கஞ்சா லேகியம் தயாரிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டம் மற்றும் சுற்று பிரதேசங்களில் கஞ்சா கலந்த போதைவஸ்துக்களின் அதிகரிப்பு ஏற்பட்டு வருவதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

எம்பிலிபிட்டிய மற்றும் தனமல்வில ஹம்பகமுவ உட்பட பல இடங்களிலுள்ள வனப்பிரதேசங்களில் சட்டவிரோத கஞ்சா செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாதுகாப்புதுறை ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் கஞ்சா நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் கடத்தப்படுவதாகவும் இவை



பல்வேறு வழிகளிலும் கடத்தப்படுவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன் இப்பகுதியில் கிடைக்கும் கஞ்சா செடிகளின் மூலம் லேகியம் மற்றும் குளிசை வடிவங்களிலான போதைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சட்டவிரோதமான முறையில் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் வயதுவந்தோர் மத்தியில் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலைமை எதிர்கால இளைய தலைமுறையின் எதிர்காலத்தைப் பாதிப்படையச்செய்யும் அவதான நிலை ஏற்பட்டுள்ளதால் இவ்விடயத்தில் பெற்றோர் சமூக ஆர்வலர்கள் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என பாதுகாப்பு துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

அண்மைக்காலமாக போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதுடன் இவற்றில் கஞ்சா மூலப் பொருட்களில் ஒன்றாக கலந்திருப்பது பரிசோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக பாதுகாப்புத்தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

# பதுளை மாவட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பம்

(ஊவா சுழற்சி நிருபர்)



மலையகத்திலும் பிற நகரங்களைப் போல் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் பாரிய வாகன வரிசைகள் தினமும் காணப்படுகின்றன. குறிப்பாக பதுளை மாவட்டத்தில் பதுளை, பண்டாரவளை, தியத்தலாவை, வெலிமடை, பொறலந்தை, ஹப்புத்தளை, ஹெலஹல்ப,கெப்பெட்டிப்பொல, மஹியங்கணை போன்ற இடங்களிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையங்களில் கடந்த நான்கு நாட்களாக எரிபொருளை நிரப்ப பிரதேச வாசிகளின் வாகனங்கள் வரிசைக் கிரயமாக சுமார் இரண்டு ,மூன்று கி.மீ.தூரம் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வீதிகளின் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து பொலிஸாரும் இராணுவமும் போக்குவரத்தினை சீர் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். வீதியின் ஒரு வழிப்பாதையினை பயன்படுத்துமாறு கோரி வருகின்றனர். இது இவ்வாறிருக்க பொறலந்தைப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு நேற்றுமுன் தினம் நள்ளிரவு வருகை தந்த எரிபொருள் வவுஸர் பதுக்கப்பட்டமையால் வரிசையில் நின்று கொண்டிருந்த வாகன சாரதிகள் கூச்சலும் குழப்பமும் எற்படுத்தினர். இதனால் பிரதேசமெங்கும் அமைதியின்மை எற்பட்டது. இதனையடுத்து பெற்றோல் நிரப்பு நிலைய ஊழியர்களால் அருகிலுள்ள மரத்திலிருந்த குளவிக் கூடு ஒன்றினை கல் எறிந்து கலைத்துள்ளதாகவும் விடயமறிந்து போகாஹகும்புர பொலிஸார் இராணுவத்தினருடன் ஸ்தலத்திற்கு விரைந்து நிலமையினைக் கட்டுப்பாட்டுக்குக்குள் கொண்டு வந்தனர்.

# தமிழ்நாட்டின் நிவாரண பொருட்கள் இந்திய உதவி தூதுவரால் வழங்கி வைப்பு



இந்திய தமிழ்நாட்டின் நிவாரண பொருட்களின் ஒரு தொகுதி நுவரெலியா கொத்மலை பகுதியில் 34012 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தியாவில் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் மூலமாக இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண பொருட்களின் ஒரு தொகுதி அண்மையில் கண்டி இந்திய உதவி தூதரகத்தின் உதவி தூதுவர் டாக்டர். எஸ் . அதிராவினால் கொத்மலை பிரதேச மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, கொத்மலை பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கொத்மலை பிரதேசத்தில் வசிக்கின்ற கிராமப்புறங்களைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கும் பெருந்தோட்ட பகுதியில் குறைந்த வருமானங்களை பெறுகின்ற 34012 குடும்பங்களுக்கும் இந்த நிவாரண பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிவாரண பொருட்களில் 10 கிலோ கிராம் அரிசியும் பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கான பால் மாவும் வழங்கப்பட்டது.

# காற்றாலை திட்டத்தை அதானி குழுமத்திற்கு வழங்குவதில் ஆட்சேபனை தெரிவிக்க முடியாது

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



21ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு முழுமையாக அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்றுமுன்தினம் (16.06.2022) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்தியாவே இலங்கைக்கு அதிகமான உதவிகளை வழங்கி வருவதால் காற்றாலை திட்டத்தை அதானி குழுமத்திற்கு வழங்குவதில் ஆட்சேபனை தெரிவிக்க முடியாது. அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளராக இருக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் கடுமையான எரிபொருள் நெருக்கடி நிலவும் நிலையில், உலக நாடுகளை கருத்திற்கொள்ளாமல் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக் கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டி தெப்பக்குளத்தினை பாதுகாக்க நடவடிக்கை



கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

கண்டி வரலாற்று புகழ்மிக்க தெப்பக்குளம் கண்டி மாநகரை அழகுப்படுத்துவதால் குளத்தினை கண்டி மாநகர நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென கண்டி மாநகரசபை மேயர் கேசரசேனாநாயக்க தெரிவித்தார். மாநாகரசபை உறுப்பினர் வருனலியனகே இதுதொடர்பில் கோரிக்கை முன்வைத்துள்ளார். இவரது ஆலோசனைக்கமைய கருத்து தெரிவிக்கையிலேயே கண்டி மாநகரசபை மேயர் கேசரசேனாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் கண்டி தெப்பக்குளத்திலுள்ள மீன்கள் இறந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கண்டி அம்பிட்டிய வீதியில் ரத்துபோக்குவ என்ற இடத்தில் நீர்பாசன திணைக்களத்தில் கனரக வாகனங்கள் கழுவப்படுவதால் அதன் கழிவுகள் மூலம் தெப்பக்குளத்து மீன்கள் இறந்துள்ளதாகவும் ஆய்வுகள் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளன.

கண்டி மாநகர வரலாற்றில் கண்டியை அழகுப்படுத்தும் இத்தெப்பக்குளத்தை உடனடியாக காப்பாற்ற வேண்டும் எனவும் இதனை மாநகரசபை நிர்வாகத்திற்கு கையேற்கப்பட வேண்டும் எனவும் தற்பொழுது நீர்பாசன திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.



சப்ரகமுவ மாகாணத்தில் யுத்தத்தினால் கால்களை இழந்த இராணுவ வீரர்களுக்கு தற்காலிக கால்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (16) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது கால்களை இழந்த 12 இராணுவ வீரர்களுக்கு தற்காலிக கால்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் எச்.டி.சிசிர, சப்ரகமுவ மாகாண இராணுவ அதிகார சபையின் அதிகாரி ரோஹன விஜேரத்ன, இரத்தினபுரி மாவட்ட அதிகாரி கயான் விஜேவிக்ரம, ஆகியோர் கலந்து கொண்டனர்.



இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் மற்றும் கனடா உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் PMIWILL செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபைக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் மஸ்கெலியாவில் கைச்சாத்திடப்பட்டது. மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கோவிந்தன் செம்பவள்ளி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் விசேட அதிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

படம் மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

# கண்டி வரலாற்றுப் புகழ்மிக்க எசல பெரஹரா

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

கண்டி வரலாற்றுப் புகழ்மிக்க எசல பெரஹரா ஆகஸ்ட் 2ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தலதா மாளிகை தியவதன நிலமே பிரதீப் திலங்கதெல அறிவித்தார்.

எசல பெரஹராவுக்காக காப்பு கட்டல் நிகழ்வு 29ஆம் திகதி அதிகாலை நடைபெற்று ஆகஸ்ட் 1ஆம் திகதி வரை உள்வீதி பெரஹரா, 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை பெரஹராவும் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி முதல் சிறப்பு மிக்க ரந்தோலி பெரஹராவும் நடைபெற்று 12ஆம் திகதி நீர் வெட்டுடன் பகல் பெரஹரா நடைபெறவுள்ளது.






இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தினால் பேராதனைப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடக்க நிகழ்வில் இந்திய உதவித் தூதுவர் டாக்டர் எஸ். அதிரா உரையாற்றவதையும், கல்வியாளர்கள், ஆசிரியர் மற்றும் ஊழியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டுள்ளதையும் படத்தில் காணலாம்.

(படம் கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

# டயர் தட்டுப்பாடு : பலாங்கொடை டிப்போ போக்குவரத்து சேவைகள் இடை நிறுத்தம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை இலங்கை போக்குவரத்துச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர். இந்நிலைமையால் பஸ் வாரப்பயணச்சீட்டுப் பெற்றுள்ள பாடசாலை மாணவர்கள், அரச, தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயமாக பலாங்கொடை இலங்கை போக்குவரத்து சபை டிப்போ முகாமையாளர் தர்மசிரி ஹரிஸ்சந்திரவிடம் வினவிய போது, டயர் தட்டுப்பாடு காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தற்போது பலாங்கொடை டிப்போவிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பெல்மதுளை, கல்தோட்டை தியவின்ன, உடகந்த உட்பட 25 வீதிகளின் போக்குவரத்துச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெரஹரா ஊர்வலத்தில் சென்ற யானை தாக்கியதில் உதவியாளர் பலி

(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

கண்டி குண்டசாலை தொகுதியில் மெனிக்கின்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெனிக்கின்ன விஹாரையில், பெரகரா ஊர்வலத்தில் சென்ற யானை தாக்கியதில் யானை பாகனின் உதவியாளர் இறந்துள்ளார். இறந்தவர் குறுளுவத்த கங்கொடகெதர பியசேன (65) ஆவார். பாகனை அடித்த யானை எவ்வித சலனமும் இன்றி பெரஹரா ஊர்வலத்தில் அமைதியாக சென்றதாக மெனிக்கின்ன பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மெனிக்கின்ன பொலிஸார் செய்து வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



# வன்முறை, தீவிரவாதத்தை தடுப்பதற்கு சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்தும் வேலைத்திட்டம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



நாட்டில் வன்முறை,தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு சமூகக் குழுக்களின் திறன்களை மேம்படுத்தல் தொடர்பான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு வருவதாக அத்திட்டத்திற்குப் பொறுப்பான முகாமையாளர் ஷாபி நயாஜ் தெரிவித்தார்.

தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பில் காத்தான்குடி கடற்கரையோர விடுதியில் புதன்கிழமை (15) வன்முறை, தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான தெளிவூட்டல் விழிப்புணர்வு, நடைபெற்றது. தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் தலைமைச் செயற்பாட்டு அலுவலர் பி. பெனிக்னஸின் ஒருங்கிணைப்பில் இது,இடம்பெற்றது.

இந்த தெளிவூட்டல் விழிப்புணர்வு செயலமர்வில் சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்கள், மாவட்ட சர்வமத செயற்பாட்டாளர்கள், அரச அலுவலர்கள், இளைஞர் யுவதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், இலங்கையில் வன்முறை மற்றும் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான திட்டத்தின் முகாமையாளர் ஷாபி நயாஜ், அதன் சிரேஷ்ட திட்ட அலுவலர் என். எம். அமில மதுசங்க, திட்ட அலுவலர் மஹேஷா பத்திராஜா, தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் திட்ட அலுவலர் எச்.எம். பாத்திமா சர்மிலா உள்ளிட்ட இன்னும் பல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு சமூகக்குழுக்களின் திறன்களை மேம்படுத்தல் திட்டம் மட்டக்களப்பு, மன்னார் வவுனியா, அம்பாறை, கண்டி, குருநாகல் ஆகிய ஆறு மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுவதாக அதன் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சமூகங்களின் உறுப்பினர்கள் 2400 பேர், 980 இளைஞர் யுவதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்கள், மாவட்ட சர்வமத செயற்பாட்டாளர்கள், அரச அலுவலர்கள், பொலிஸார், சமூகத் தலைவர்கள் உட்பட 480 பேர் உள்ளடங்கலாக மொத்தம் 10 இலட்சம் பிரஜைகளை இணைத்துக் கொண்டு இத்திட்டம் அமுலாக்கப்படுவதாகவும் நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித்திட்டம், தேசிய சமாதானப்பேரவை, ஹெல்விற்றாஸ் ஶ்ரீலங்கா ஆகிய தன்னார்வ நிறுவனங்களின் வழிகாட்டலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

# ஏறாவூர் வாவியிலிருந்து மீனவரின் சடலம் மீட்பு



**பெரியபோரை தீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு ஏறாவூர் ஆறுமுகத்தான்குடியிருப்பு வாவியிலிருந்து மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறுமுகத்தான்குடியிருப்பு துரைச்சாமி வீதியை அண்டி வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை ஶ்ரீதரன் (வயது 51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.நேற்று வியாழக்கிழமை இச்சடலம் மீட்கப்பட்டது.

வழமைபோன்று தனியாகவே வாவியில் இரவுநேரம் மீன்பிடிக்கச் செல்லும் இவர், இரவுச் சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு புதன்கிழமை மாலை தோணியில் வாவிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

வியாழக்கிழமை காலை இவரது சடலம் வாவியில் மிதப்பதைக் கண்டு, சக மீனவர்கள் மீட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

புதன்கிழமை மாலை வாவியில் பலத்த காற்று வீசியதாகத் தெரிவிக்கும் மீனவர்கள்,தோணி கவிழ்ந்ததால் இவர் வாவியில் வீழ்ந்து மூழ்கியிருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கின்றனர். ஏறாவூர் பொலிஸார் இச்சம்பவம்பற்றி மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# தேங்கிக்கிடந்த குப்பைகளை அகற்றியமைக்கு நன்றி தெரிவிப்பு

நிந்தவூர் பிரதான தபால் நிலையத்திற்கு முன்னால் குப்பைகள் தேங்கிக் கிடப்பது பற்றியும் இதனால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் தினகரன் பத்திரிகையில்

பிரசுரமான செய்திக்கு பலன் கிட்டியுள்ளது. இந்த அடிப்படையில், நிந்தவூர் பிரதேச சபையானது விரைவான நடவடிக்கைகளை எடுத்து, குறித்த இடத்தை சுத்தப்படுத்தியுள்ளதுடன், பொதுமக்கள் பாவனைக்குத் தகுந்த இடமாகவும் இதை,மாற்றிக்கொடுத்துள்ளது.

அத்துடன் குறித்த செய்தியை பிரசுரித்து தீர்வினைப் பெற்றுத்தந்தமைக்காக தினகரன் பத்திரிகைக்கும், நிந்தவூர் பிரதேச சபைக்கும் நிந்தவூர் பிரதேச பிரதான தபால் அலுவலக ஊழியர்களும், பொது மக்களும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

மேலும், இனிவருங்காலங்களில் குறித்த இடத்தில் குப்பைகளைக் கொட்டுபவர்களுக்கு எதிராக, உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் நிந்தவூர் பிரதேச சபையைக் கேட்டுள்ளனர்.

# கதிர்காம ஆடிவேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் கோலாகலமாக நட்டு வைப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் ( பந்தல்கால்) நடும் வைபவம் கடந்த புதன்கிழமை(15) அதிகாலை கோலாகலமாக நடைபெற்றது .

கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்திற்கான கொடியேற்றம் எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆம் திகதி நடைபெற்று, ஆகஸ்ட் 12 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. இந்த ஆடிவேல் உற்சவத்திற்கான கன்னிக்கால் நடும் வைபவம் 45 தினங்களுக்கு முன்பு இடம்பெறுவது பாரம்பரியம்.

அந்தவகையில் (15) புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் இந்த பந்தக்கால் நடும் வைபவம் இடம்பெற்றது.முதல் நாள்(14) செவ்வாய்க்கிழமை இரண்டு கால்கள் மரத்திலிருந்து வெட்டப்பட்டு மாணிக்க கங்கையில் சுத்தம் செய்யப்பட்டு, வள்ளியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டது.

மறுநாள் புதன்கிழமை அதிகாலை அங்கிருந்து அதனை பிரதான கந்தன் ஆலயத்திற்கு கொண்டு வந்து 5 மணியளவில் அதற்கு மஞ்சள் குங்குமம் சாத்தப்பட்டு 5.15 மணியளவிலே அங்கு கன்னிக்கால் நடப்பட்டது.

கன்னிக்கால் நட்டு நாற்பத்தி ஐந்தாவது நாள் கொடியேற்றம் இடம்பெறுவது வழமையாகும்.

கதிர்காம பஸ்நாயக்க நிலமே நிஷாந்த் குலசேகரவின் பிரதிநிதியாக அவரது செயலாளர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்.

இம்முறை சிறப்பாக இந்த விழாவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சமய சாஸ்திர முறைப்படி இம்முறை 15 நாட்கள் திருவிழா என்பதற்கு பதிலாக 14 நாட்கள் திருவிழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# அரபுநாடுகளின் தூதுவர்களை சந்திக்கும் ஏற்பாடுகள் ஆரம்பம்

## சவூதி தூதுவருடன் அமைச்சர் நஸீர் அஹமட் பேச்சு



அரபு நாடுகளின் தூதுவர்களை சந்திக்கும் முன்னோடி ஏற்பாடுகளில், சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் புதன்கிழமை (15) இலங்கைக்கான சவூதி அரேபியபதில் தூதுவர் அப்துல்லா எ.எ. ஓர்கோபியை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இருதரப்பு உறவுகளை பலப்படுத்தும் சந்தர்ப்பமாக இப்பேச்சுக்கள் அமைந்திருந்தன.

அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கருணாசேனா ஹெட்டியாராய்ச்சி மற்றும் சிரேஷ்ட இராஜதந்திரியான ரி.ஷற்.ஏ சம்சுடீன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், சுற்றாடல் துறையின் மேம்பாடுகளால் அடையக்கூடிய அதிகளவான நன்மைகளை அடையாளங்காணல் மற்றும் அவற்றை நடைமுறைபடுத்துவதில் இருநாடுகளும் ஒத்துழைத்துச் செயற்படல் பற்றி பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கை எதிர்கொண்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு, சவூதி ஒத்துழைக்க வேண்டியதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. முறையான எரிபொருள் விநியோகம் இன்னும் இலங்கை ஹஜ்யாத்திரிகர்களுக்கு விஷேட வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட விவகாரங்களையும் அமைச்சர் நஸீர் அஹமட் சவூதிஅரேபிய தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

சவூதியில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களின் விடயங்களிலும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.இதற்கு மேலதிகமாக இன்னும் பல அரபுநாடுகளின் தூதுவர்களையும் அமைச்சர் நஸீர் அஹமட் சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

# சமூக ரீதியான கல்வியை மட்டுமன்றி, சமய ரீதியான கல்வியையும் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும்

**நிந்தவூர் குறூப் நிருபர்**



பிள்ளைகளுக்கு சமூக ரீதியான கல்வியை மட்டுமன்றி, சமய ரீதியான கல்வியையும் பெற்றுக்கொடுக்க பெற்றோர்கள் முன்வரவேண்டுமென இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் யூ.எல். யாக்கூப் தெரிவித்தார்.

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் ஒழுங்கமைப்பினரால்,(13) அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் "மாணவரிற்கு மகுடம்" கௌரவிப்பு நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு உரையாற்றுகையில் ;

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் இவ்வமைப்பின் பல சேவைகள் பாராட்டத்தக்கது. அதிலும் தற்போது தேவையுடைய மாணவர்களுக்கு வலிந்து உதவுகின்றமையானது, இக்காலகட்டத்தில் மிகப்பெறுமதி வாய்ந்ததாகும். இதனால் மாணவர் சமுதாயம் மட்டுமன்றி பெற்றோர்களும் பயன்பெறுவார்களாயின் அதுவே மேலானதாகும்.

மேலும் தமிழ் முஸ்லிம் உறவுக்கு வலுவான பிரதேசம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசம். இவ்வாறு காரைதீவும் இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. இந்த இன உறவு எதிர்காலத்தில் இன்னும் வலுப்பெற வேண்டும்.

பெற்றோர்களின் முக்கிய பங்கு பிள்ளைகளுக்கு சமூக ரீதியான கல்வியை மட்டுமன்றி சமய ரீதியான கல்வியையும் பெற்றுக் கொடுப்பதே. பிள்ளைகள் தங்களை சமூக ரீதியாக வலுப்படுத்திக் கொள்வதற்கு பயனளிக்கக்கூடிய கல்வியைத் தேடிப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். அத்துடன் பெற்றோர்களுக்காக பிள்ளைகளும் பிள்ளைகளுக்காக பெற்றோர்களும் பிராத்தனை செய்வது இறைவனிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்று உலகம் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மக்களின் கைகளிலும் உலக விடயங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிலுள்ள நோயாளிக்கு தொழில்நுட்பத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்படும் அளவுக்கு நவீனத்துவம் வளர்ச்சி அடைந்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினை, வசதியுள்ளவர்கள், வசதியற்றவர்கள் என்று பாராமல் அனைவருக்கும் பொதுவானதாகவே உள்ளது. நாட்டிற்கு அடுத்து வரும்காலம் மிகவும் இக்கட்டானது. வறிய மக்களிடத்தில் மட்டுமன்றி செல்வந்தர்களுக்கும் இது கஷ்டமான காலமாகலாம். பணமிருந்தும் பொருட்களை பெற முடியாத நிலைமை ஏற்படலாம். எனவே, இந்த பொருளாதார நெருக்கடி நிலைமை நீங்கி நாடு பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று சுபீட்சமடைய அனைவரும் பிரார்த்திப்போம் எனக் கேட்டுக் கொண்டார்.

இதன்போது, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான யூ.எல். யாக்கூப்பின் சேவையைப் பாராட்டி இச்சமூக சேவை அமைப்பினரால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஐ.எம் நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ. புஹாது, அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் ரீ. நடேசலிங்கம், அட்டப்பள்ளம் சிங்கார மாரியம்மன் ஆலய தர்மகர்த்தா ரீ. கோபாலன் உள்ளிட்ட மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலையேற்றம், தட்டுப்பாடு காரணமாக நேற்று நாவிதன்வெளி விவேகானந்த மகாவித்தியாலய ஆசிரியர்கள் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு வந்தனர். துவிச்சக்கரவண்டியில் பாடசாலைக்கு வரும் ஆசிரியர்களை படத்தில் காணலாம். படம்: காரைதீவு குறூப் நிருபர்

# மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் இலங்கை ஆசிரியர் சங்கம் பேச்சுவார்த்தை

**மணல்சேனை நிருபர்**


ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் இலங்கை ஆசிரியர் சங்கம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது.

தற்போது நாட்டில் ஏறபட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடானது ஆசிரியர்கள் கடமைக்கு செல்வதிலும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தியுள்ளது. எனவே,எரிபொருளை பெற்றுக்கொள்வதில் முறையான பொறிமுறைய ஏற்படுத்தித்தருமாறு பல ஆசிரியர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதற்கு அமைவாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன்னுத்துரை உதயரூபன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரை தொடர்பு கொண்டுமேற்படி விடயம் தொடர்பாக பேசினார்.

மேலும் மாவட்ட அரசாங்க அதிபர் மண்முனைபற்று வடக்கு பிரதேசசெயலாளருடன் தொடர்பினை ஏற்படுத்தி, மட்டக்களப்பு வலயகல்விப்பணிபாளருடன் இது தொடர்பாக சந்திப்பை நாடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

# நகர்வலம்



## ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பிரிவின் பரிசளிப்பு விழா கொழும்பில்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவைப் பிரிவு அகில இலங்கை ரீதியாக நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளில் தெரிவானவர்களுக்கான பரிசு, சான்றிதழ் என்பன வழங்கும் நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கில் நடைபெறும்.

கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் முஸ்லிம் சேவைப் பிரிவு கட்டுப்பாட்டாளர் ரினோசியா ஜவ்பர் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும், விசேட அதிதிகளாக கூட்டுத்தாபன நிகழ்ச்சி தயாரிப்புப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் மயூரி அபேசிங்கவும், கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், தமிழ் பிரிவு ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது மேற்படி போட்டி நிகழ்வுகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ், பரிசில்கள் என்பன வழங்கப்படும்.

## சமூக சேவை திட்டம்




இலங்கை இராணுவ மருத்துவ கல்லூரியும் இலங்கை விமானப் படை சேவா வனிதா பிரிவும் இணைந்து சீதுவ தொழில்பயிற்சி நிலையத்தில் சமூக சேவை திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து இருந்தது.

இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிபுணர்களின் உதவியுடன் இச் சமூக சேவை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி சார்மினி பத்திரன பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிகேடியர் (டாக்டர்) கிறிஷாந்த பெர்னாண்டோ, இலங்கை கடற்படையின் கொமண்டோர் (டாக்டர்) ஜானக மரம்பகே, இலங்கை விமானப்படையின், எயார் வைஸ் மார்ஷல் (டாக்டர்) லலித் ஜயவீர மற்றும் அவர்களின் துணைவியர்கள் மற்றும் விமானப்படை பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர் .

இதன் போது சுமார் 300 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

விமானப்படை இசைக்குழுவினால் இசைநிகழ்வும் நடாத்தப்பட்டது . வறிய குடும்பத்தினருக்கு 100 உலருணவு பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன மற்றும் விமானப்படை சுகாதார பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் லலித் ஜெயவீர ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் இடம்பெற்றன.

## இலங்கை பொருளாதார பிரச்சினை குறித்து மனித உரிமை பேரவை தலைவருக்கு பீரிஸ் விளக்கம்



இலங்கையின் சமூகப் பொருளாதார பிரச்சினை குறித்து மனித உரிமைகள் பேரவைத் தலைவருக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் விளக்கம் அளித்தார்.

மனித உரிமைகள் பேரவையின் 50வது கூட்டத் தொடர் அண்மையில் இடம்பெற்றது. இதன் ஒரு அம்சமாக, மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மற்றும் அணிசேரா இயக்கத்தின் (ஜெனீவா அத்தியாயம்) ஒருங்கிணைப்பாளரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் சந்தித்தார். இந்த சந்திப்பு ஜெனீவாவில் இடம்பெற்றது.

மனித உரிமைகள் பேரவையின் தலைவரும் ஆர்ஜென்டினாவின் நிரந்தரப் பிரதிநிதியுமான. ஃபெடரிகோ வில்லேகாஸ் உடனான சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய சமூகப் பொருளாதார நிலைமை மற்றும் சர்வதேச சமூகத்தின் பச்சாதாபம் மற்றும் புரிதலின் அவசியம் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விளக்கினார். நாடு ஏராளமாகப் பெற்று வரும் மகத்தான பிரதிபலிப்பு மற்றும் உதவிக்கு அவர் பாராட்டு தெரிவித்தார். தற்போதைய சமூகப் பொருளாதார பிரச்சினைகளை சமாளிப்பதற்கான அவசியத்தை வலியுறுத்திய அதே வேளையில், கடமைகளை சமாளித்து முன்னேறுவதற்கான அரசியல் விருப்பத்தையும் உறுதியையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த வகையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டம், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 21வது திருத்தம், சுயாதீன ஆணைக்குழுக்களை வலுப்படுத்துதல், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் சிவில் சமூகத்துடன் ஈடுபாடு உட்பட அளவிடக்கூடிய மற்றும் சரிபார்க்கக்கூடிய முன்னேற்றத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எடுத்துரைத்தார். நிலையான அபிவிருத்தி இலக்குகளில் இலங்கையின் கணிசமான முன்னேற்றம் குறித்தும் விளக்கிய அவர், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி அறிக்கை 2021 இலங்கையை 87வது இடத்திலும், ஒட்டுமொத்த தரவரிசையில் 68.1 நிலையிலும் வைத்துள்ளமை, பிராந்திய சராசரியை விட அதிகமாவதுடன், 165 நாடுகளில் 7 நிலைகளால் அதிகரித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டினார்.

சமகால சவால்களை எதிர்கொள்வதற்காக வேறு எந்த நேரத்தையும் விட இன்று ஒற்றுமை மற்றும் அணிசேரா ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். அணிசேரா இயக்கத்திற்கு அதிகமான புத்துயிர் அளிக்குமாறு கோரிய அவர், அணிசேரா இயக்கத்தின் முன்முயற்சிகளுக்கு இலங்கையின் தொடர்ச்சியான மற்றும் செயலூக்கமான ஆதரவை உறுதியளித்தார்.



கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் நஷ்டஈட்டினையும் இயற்கை மரணமடைந்த கடற்றொழிலாளியின் குடும்பத்திற்கு நஷ்டஈட்டுத் தொகையாக 250,000 ரூபாயும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

## லண்டனில் மலையக இலக்கிய மாநாடு







லண்டனில் அண்மையில் நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில் பிடிக்கப்பட்ட படங்கள்.



திண்டுக்கல், தோட்டனூத்து கிராமத்தில் 17.17 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் இ. பெரியசாமி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அயலக நல்வாழ்வு நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச. விசாகன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ச. தினேஷ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் ப. வேலுச்சாமி வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச. காந்திராஜன் உட்பட துறைசார் அலுவலர்கள் பலர் அருகில் உள்ளனர்.

## லடாக்கின் பகுலா ரின்போச் அரஹத் அவதாரமாக அறிவிப்பு




நவீன லடாக்கின் சிற்பி என அறியப்படும் 19வது பகுலா ரின்போச் பகுலா அரஹத்தின் அவதாரமாக உத்தியோகபூர்வமாக அறியப்பட்டுள்ளார். 13 வது தலாய்லாமா இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. கௌதம புத்தரின் நேரடிச் சீடர்களில் 16 பேர் அரஹத்துகளாக (புனிதர்கள்) அறியப்படுகின்றனர். அவர்களில் ஒருவரே பகுலா அரஹத்.

1917 ஆம் ஆண்டு லடாக்கில் பிறந்த இவர் திபெத் சென்று பௌத்த அறக் கல்வி பயின்று பௌத்த சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றார். தன் உயர் கல்வியை முடித்துக்கொண்டு 1940 இல் இவர் லடாக் திரும்பினார். திரும்பி வந்தபோது லடாக் அரசு அதிகாரிகளின் எதேச்சதிகார போக்குகளினால் மக்கள் துயர வாழ்க்கையை மேற்கொண்டு வருவதைக் கண்ட பகுலா ரின்போச், அவர்களுக்கு ஆன்மிக மற்றும் அரசியல் விடுதலையை பெற்றுக்கொடுப்பதற்காக அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கினார் என்று அவரைப் பற்றி தெரிவிக்கப்படுகிறது.

## அரச நியமனங்களில் பாக். உளவுத்துறை தலையீடு

### பாகிஸ்தான் அரசு அனுமதி அளித்திருப்பதாக குற்றச்சாட்டு



அரச அதிகாரிகளின் நியமனம், பதவி உயர்வு போன்ற சிவில் நிர்வாகக் கட்டமைப்பில் இராணுவத் தலையீட்டுக்கு புதிய பாகிஸ்தான் அரசு வழி வகுத்திருப்பதாக அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. அரச நியமனங்களை பரிசீலிக்கும் உரிமையை பாக். உளவுச் சேவையான ஐஎஸ்ஐ அமைப்புக்கு ஷெபாஸ் ஷரீப் அரசாங்கம் வழங்கியுள்ளதாக வெளிவந்த செய்தியை அடுத்தே எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக ஆசியன் லைட் நியூஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உளவுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அனுமதியானது, அரச அதிகாரிகளின் பணி நியமனம், இடமாற்றல், பதவி உயர்வு என்பனவற்றை கையாளும் மற்றும் கண்காணிக்கும் அதிகாரத்தை அளித்திருப்பதாக இச் செய்தி மூலம் அறிய முடிகிறது.

பாகிஸ்தான் சிவில் நிர்வாகத்தை ஏற்கனவே பாக். இராணுவம் மறைமுகமாக கட்டுப்படுத்தி வருகிறது. புதிய அனுமதியானது நிலைமையை மேலும் மோசமாக்கி இருப்பதோடு நாட்டின் சிவில் நிர்வாக சுதந்திரத்தில் இராணுவத்தின் குறுக்கீடு அதிகரிக்க வழி ஏற்பட்டிருப்பதாகவும் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## இந்தியாவின் புதிய அணுகுமுறைகள் நாட்டை பலப்படுத்தியுள்ளன

### சுட்டிக்காட்டும் அவதானிகள்



இந்திய அரசின் உயர்மட்ட நிர்வாகம் முதல் அடிப்படை அரச நிர்வாகத்துறை வரை சமீப காலமாக ஏற்பட்டு வந்துள்ள மறுமலர்ச்சியானது அரசின் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் சக்தியை அதிகரித்துள்ளதாக உலகளவில் அறியப்பட்டுள்ளது.

அரசின் முன்கூட்டியே தீர்மானித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக 21 வது நூற்றாண்டின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கும் வல்லமையைத் தந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீரை இரண்டாகப் பிரித்ததோடு அவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட உரிமைகளை நீக்கி ஏனைய மாநிலங்களின் அதிகார வரம்புக்குள் கொண்டுவந்தமை, ஜம்மு, காஷ்மீர் மற்றும் லடாக்கில் 80,068 மில்லியன் ரூபா செலவில் 63 அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தியிருப்பது, புதிய கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை கொண்டுவந்திருப்பது, ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை அறிமுகம் செய்திருப்பது என்பன புரட்சிகரமான சிந்தனையின் விளைவுகள் என இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசின் உச்ச மட்ட அணுகுமுறைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இவற்றை சாதித்திருப்பதாகவும் பயங்கரவாத மற்றும் ஆபத்தான சட்ட ஒழுங்கு மீறல் சம்பவங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்திருப்பதாகவும், உள்ளூர் ஆயுத உற்பத்தி நாட்டின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தி இருப்பதாகவும் எல்லையோர பாதுகாப்பு கட்டமைப்புகள் மேலும் ஸ்திரம் பெற்றிருப்பதாகவும் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

# திரில் வெற்றியுடன் ஒருநாள் தொடரினை சமன் செய்த இலங்கை

## மூன்றாவது போட்டி கொழும்பில்



இலங்கை அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில், இலங்கை கிரிக்கெட் அணி 26 ஓட்டங்களால் திரில் வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது. இரு அணிகளும் விளையாடும் ஒருநாள் தொடரின் மூன்றாவது ஒருநாள் போட்டி, நாளை ஞாயிற்றுக் கிழமை (19) கொழும்பில் இடம்பெறுகின்றது.

இந்த வெற்றியுடன் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இன்னும் மூன்று போட்டிகள் மீதமிருக்க 1–1 என இலங்கை அணி தொடரினை சமன் செய்துள்ளது.

கண்டியில் (16) இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை இலங்கை அணிக்கு வழங்கியது.

இந்தப் போட்டிக்கான இலங்கை அணியில் காயமடைந்த வனிந்து ஹஸரங்கவிற்குப் பதிலாக, ஜெப்ரி வன்டர்சேய் களமிறங்கியிருந்தார். மறுமுனையில் அவுஸ்திரேலிய அணியில் இரண்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன்படி மெதிவ் குஹ்னமேன் ஒருநாள் போட்டிகளில் அறிமுகம் பெற, ட்ரவிஸ் ஹெட்டும் ஆஸி. அணியில் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். தனுஷ்க குணத்திலக்க, பெதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், துனித் வெலால்கே, சரித் அசலன்க, தனன்ஞய டி சில்வா, தசுன் ஷானக்க (அணித்தலைவர்), ஜெப்ரி வன்டர்செய், சாமிக்க கருணாரட்ன, துஷ்மந்த சமீர, மஹீஷ் தீக்ஷன

ஆரோன் பிஞ்ச் (தலைவர்), டேவிட் வோர்னர், ஸ்டீவ் ஸ்மித், மார்னஸ் லபச்சேனே, அலெக்ஸ் கெரி (விக்கெட் காப்பாளர்), ட்ராவிஸ் ஹெட், கிளென் மேக்ஸ்வெல், மெதிவ் குஹ்னமேன், பட் கம்மின்ஸ், ஜை றிச்சர்ட்சன், ஜோஷ் ஹேசல்வூட்

தொடர்ந்து நாணயச் சுழற்சிக்கு அமைய பெதும் நிஸ்ஸங்க, தனுஷ்க குணத்திலக்க ஆகியோருடன் துடுப்பாட்டத்தினைத் தொடங்கிய இலங்கை அணிக்கு மெதிவ் குஹ்னமேன் நெருக்கடி உருவாக்கினார். இதனால் பெதும் நிஸ்ஸங்கவின் விக்கெட் அவர் 14 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் வீழ்த்தப்பட்டது. இதனையடுத்து இலங்கை அணியின் இரண்டாம் விக்கெட்டாக தனுஷ்க குணத்திலக்க தனது விக்கெட்டினை 18 ஓட்டங்கள் பெற்ற நிலையில் பேட் கம்மின்ஸிடம் பறிகொடுத்தார்.

அதன் பின்னர் தனஞ்சய டி சில்வா – குசல் மெண்டிஸ் ஜோடி இலங்கை அணியின் மூன்றாம் விக்கெட் இணைப்பாட்டமாக 61 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து தனஞ்சய டி சில்வாவின் விக்கெட்டும் பேட் கம்மின்ஸின் பந்துவீச்சில் பறிபோனது. இலங்கை அணியின் 4ஆம் விக்கெட்டாக ஆட்டமிழந்த தனஞ்சய டி சில்வா 41 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களை எடுத்தார்.

தனஞ்சய டி சில்வாவின் விக்கெட்டினை அடுத்து குசல் மெண்டிஸ் 36 ஓட்டங்களுடன் தனது விக்கெட்டினை கிளேன் மெக்ஸ்வெலின் பந்துவீச்சில் பறிகொடுத்தார். குசல் மெண்டிஸின் பின்னர் தசுன் ஷானக்க மாத்திரம் சற்று பொறுப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்த நிலையில், இலங்கை அணி 47.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களுடன் காணப்பட்ட போது போட்டியில் மழையின் குறுக்கீடு ஏற்பட்டதோடு, இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் நிறைவடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் சார்பில் தசுன் ஷானக்க 5 பௌண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்கள் எடுத்திருக்க, பின்வரிசையில் ஆடிய துனித் வெலால்கே 20 ஓட்டங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு சார்பில் பட் கம்மின்ஸ் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருக்க, கிளன் மெக்ஸ்வெல் மற்றும் அறிமுக வீரர் மெதிவ் குஹ்னேமன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்திருந்தனர்.

பின்னர் அவுஸ்திரேலிய அணிக்கு டக்வெத் லூயிஸ் முறையில் 43 ஓவர்களுக்கு 216 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த வெற்றி இலக்கினை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பவீரர்களாக ஆரோன் பின்ச் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோர் களம் வந்தனர்.

இந்த வீரர்களில் அவுஸ்திரேலிய அணியின் முதல் விக்கெட்டாக ஆரோன் பின்ச் தனஞ்சய டி சில்வாவின் பந்துவீச்சில் எல்பிடபிள்யு முறையில் ஆட்டமிழந்து 14 ஓட்டங்களுடன் வெளியேறினார். டேவிட் வோர்னர் அவுஸ்திரேலிய அணியினை தொடர்ந்து பலப்படுத்தியதோடு 5 பௌண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களை எடுத்து தனஞ்சய டி சில்வாவின் பந்துவீச்சில் பறிபோன அடுத்த விக்கெட்டாக மாறினார். அவுஸ்திரேலிய அணி இலங்கை பந்துவீச்சாளர்களின் அபார பந்துவீச்சு காரணமாக துரித கதியில் விக்கெட்டுக்களை பறிகொடுத்த போதும் கிளன் மெக்ஸ்வெல் வெற்றிக்காக தன்னால் முடிந்த போராட்டத்தினை வழங்கியிருந்தார். தொடர்ந்து சாமிக்க கருணாரத்னவின் பந்துவீச்சோடு மெக்ஸ்வெலின் முயற்சி வீணாக, அவுஸ்திரேலிய அணி 37.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 189 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து போட்டியில் தோல்வியினைத் தழுவியது.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் சார்பில் கிளன் மெக்ஸ்வெல் 25 பந்துகளுக்கு 5 பௌண்டரிகள் அடங்கலாக 3–0 ஓட்டங்களை எடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் சாமிக்க கருணாரத்ன 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற துனித் வெலால்கே, தனஞ்சய டி சில்வா மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்து இலங்கை அணியின் வெற்றியினை உறுதி செய்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக சாமிக்க கருணாத்ன தனது அபார ஆட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டார்.

## மாவட்ட மட்ட கரப்பந்தாட்ட போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்து தம்பலகாமம் பிரதேச அணி



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்ட மட்ட போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய அணியினர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தனர்.

திருகோணமலை மக்கேய்சர் உள்ளக விளையாட்டரங்கில் இறுதிப் போட்டி கடந்த (15) இடம் பெற்றது. இதில் சுமார் 08 பிரதேச செயலகங்களை சேர்ந்த அணியினர் பங்கு கொண்ட நிலையில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய அணியினர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன் பட்டத்தை தனதாக்கினர் .தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின்வழிகாட்டுதலுக்கு இணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.டி.ஹாரிஸ் குறித்த அணியினருக்கு திறம்பட பயிற்சி அளித்து வந்தார். சுமார் 12 வருடங்களின் பின் ஆண் பெண் அணியினர் தம்பலகாமம் பிரதேசம் சார்பாக சம்பியனாக முடிசூடியமை குறிப்பிடத்தக்கது.

## ஒலுவில் அல்–ஹம்றா தேசிய பாடசாலை கிரிக்கெட் அணி மாகாண மட்டத்திற்கு தெரிவாகி சாதனை



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

ஒலுவில் அல் – ஹம்றா தேசிய பாடசாலை கிரிக்கெட் அணியினர் மாகாண மட்டத்திற்கு தெரிவாகி சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடை யிலான பெருவிளையாட்டுப் போட்டியான கிரிக்கெட் போட்டியில் ஒலுவில் அல் – ஹம்றா தேசிய பாடசாலை இறுதிப் போட்டிக்கு தெரிவாகி முதலாமிடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். இந்த போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்த அயராது முயற்சிகளை மேற்கொண்ட உடற்கல்வி ஆசிரியர்களான ஆர்.நௌஸாத், ஏ.எம்.எம்.கியாஸ் மற்றும் பயிற்றுவிப்பாளர்களான ஏ.ஏ.அஸ்மத் ஸஹி, எம்.முனாஸிர் ஆகியோருக்கும் இதற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் மற்றும் உதவி அதிபர் எம்.எச்.எம்.நஸீம் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றனர்.

# இளைஞர்கள் அபிவிருத்தி போராட்டத்தைத் தொடங்குவோம்

## விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க



ஒரு நாட்டின் உயிர்நாடியான இளைஞர்கள் நாட்டின் அபிவிருத்திப் போராட்டத்திற்கு மிகவும் சாதகமான முறையில் பங்களிக்க வேண்டுமென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

'புதிய சிந்தனை இளைஞர்களுக்கு வளமான நாளை' என்ற விவசாயிகள் வாரத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நாட்டில் பாரிய உணவுப் பிரச்சினை ஏற்படும் என்பது இன்று சமூகத்தில் பிரதானமான விடயமாக மாறியுள்ளது. ஒரு நாடாக நாம் அந்தச் சவாலை முறியடிக்க வேண்டும். ஒரு நாட்டின் உயிர்நாடியை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உட்பட இளைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நிறுவனங்களுக்கும் இளைஞர் விவகார அமைச்சின் பங்களிப்பு நாட்டிற்கு தேவையான தருணமாகும்.

இது தொடர்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகளை பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ரொஷான் ரணசிங்க மேற்கொண்டார். அதன்படி, இளம் விவசாயிகள் வாரம் உருவாக்கப்பட்டது. 'புதிய சிந்தனை இளைஞர்களுக்கு வளமான நாளை' எனும் தொனிப்பொருளின் கீழ் மே 16 (தினங்கள்) ஆரம்பிக்கும் நிகழ்ச்சியின் கருப்பொருள், வளமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு இளைஞர்களை ஸ்மார்ட் பண்ணை முறைக்கு வழிநடத்துவதன் மூலம் திறமையான விவசாயி இளைஞர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதனை இளைஞர் பயிர்ச்செய்கைப் போராட்டம் என அழைக்கும் அமைச்சர், "நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து இளைஞர்களை விவசாயத்தின் பக்கம் திருப்புவதன் மூலம் தேசிய நலன்களை உள்ளடக்கிய இளம் உழவர் படையை உருவாக்க எதிர்பார்க்கிறேன். இது முழுக்க முழுக்க இளைஞர்கள் தங்கள் வீடுகளில் விவசாயம் செய்ய ஊக்குவிக்கும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக, இளைஞர்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு வாய்க்கால்களிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்குவேன்.

நாட்டில் 5 மில்லியன் இளைஞர் இளைஞர் போராட்டத்திற்கு பங்களிப்பது எனது நம்பிக்கை. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அனைத்து பிரதேச செயலகங்களிலும் உள்ள இளைஞர் கழகங்களின் சம்மேளன இளைஞர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட உள்ளது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 20 பண்ணைகள், 54 பயிற்சி நிலையங்கள், 10 மாகாண அலுவலகங்கள் மற்றும் 26 மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்று கட்டங்களாக அமுல்படுத்தப்படவுள்ள பயிர்ச்செய்கை யுத்தம் எதிர்வரும் 16ஆம் திகதி நிலத்தயாரிப்புக்காகவும், 20ஆம் திகதி விதை மற்றும் நாற்று நடுகைக்காகவும் மேற்கொள்ளப்படவுள்ளது. நாட்டை நேசிக்கும் இளைஞர்களை இந்த இளைஞர் பயிர்ச்செய்கை போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நான் அழைக்கிறேன்" என அமைச்சர் தெரிவித்தார்.

மேற்கண்ட செய்திகளை ஊடகங்களில் வெளியிட்டு பரந்த விளம்பரம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் ஆதரவிற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

## பாலமுனை றைஸ்டார் ரகர் அணி மாகாண மட்ட சாதனையாளர்களாக தெரிவு




(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண ரகர் விளையாட்டுப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தி விளையாடிய பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழக அணியினர் கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளதுடன் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழக அணியினரை பாராட்டி வரவேற்கும் நிகழ்வு கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம்.பாயிஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

## மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு விழா - 2022



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு விழா 2022 இல் கூடைப் பந்தாட்டப் போட்டியில் இம்முறை மண்முனை வடக்கு பிரிவின் ஆண்கள் அணியினர் சம்பியனாக தெரிவானதுடன், பெண்களுக்கான வலைப்பந்து போட்டியில் ஏறாவூர்ப் பற்று பெண்கள் அணியினர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளனர். அதேவேளை பெண்களுக்கான வலைப்பந்து போட்டியில் மண்முனை வடக்கு அணியினர் இரண்டாம் இடத்தினையும், கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஏறாவூர்ப்பற்று ஆண்கள் அணியினர் இடண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.